லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-08 இதழ்-11 ஏப்ரல் - 2020 மாதஇதழ் விலை ₹ 10

INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INDIA
ISSN : 2582-5275



# எடப்பாடி பழனிசாமிக்கு பிரதமர் மோடி பாராட்டு


வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
GE
Herbal Supplement
GENERAL ENERGY TONIC
Herbal Tonic
Natural Health Care
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.2/9, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

"அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்"

# என்னவென்று சொல்வது

உலகம் கரோனா நோய்த்தொற்று பரவுவதைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் போர்க் கால அடிப்படையில் போராடிக் கொண்டிருக் கும்போது, கொஞ்சம்கூடப் பொறுப்பில்லாமல் தில்லி நிஜாமுதீன் பகுதியில் தப்லீக் ஜமாத் அமைப்பின் இஸ்லாமிய மாநாடு கூட்டப் பட்டது பேரதிர்ச்சி அளிக்கிறது. தவறு செய்தது போதாது என்று தாங்கள் செய்த தவறை அவர் களில் பலர் நியாயப்படுத்த முயல்வதும், அந்த அமைப்பினருக்குச் சிலர் ஆதரவுக் குரல் கொடுப்பதும், இதை மதப்பிரச்னை ஆக்கக் கூடாது என்று கூறி அடக்கி வாசிக்க முயல்வதும், ஜாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக்கடந்து ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் இழைக்கும் துரோகம். தில்லி நிஜாமுதீனில் செயல்படும் தப்லீக் ஜமாத்தின் தலைமையகம், அலமி மர்கஸ் பங்களேவாலி மசூதியில் அமைந்திருக்கிறது. இப்போது வெளிவரும் செய்திகளிலிருந்து, மதத் தீவிரவாதத்தின் நாற்றங்காலாக இந்த அமைப்பு செயல்பட்டு வந்திருக்கிறது என்று தெரிகிறது. உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்த பயங்கர வாதத் தாக்குதல்களுக்கும் இந்த அமைப்புக்கும் தொடர்பு இருப்பதும் தெரிய வந்திருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் 13 முதல் 15-ஆம் தேதிவரை தப்லீக் ஜமாத்தின் தலைமையகமான பங்களேவாலி மசூதியில் நடந்த மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து மட்டுமல்லாமல், உலகின் ஏனைய இஸ்லாமிய நாடுகளிலிருந்தும் பலர் கலந்து கொண்டனர். 200 பேர்களுக்கும் அதிகமானவர்கள் கூடும் எல்லா விளையாட்டுப் போட்டிகள், மாநாடுகள், மதச்சடங்குகள் ஆகிய வற்றையும் தடை செய்து தில்லி அரசு பொதுத் தடை அறிவித்த அன்றுதான் தப்லீக் ஜமாத்தின் மூன்று நாள் மாநாடு தொடங்கியது. உடனேயே அந்த மாநாட்டை ரத்து செய்து முடிவுக்குக் கொண்டுவந்திருந்தால், எல்லோரும் அவரவர் ஊருக்குத் திரும்பி இருப்பார்கள். மார்ச் 16-ஆம் தேதி, 50 பேருக்கும் அதிகமானோர் கூடும் எல்லாக் கூட்டங் களையும் மார்ச் 31 வரை தடை செய்வதாக தில்லி அரசு அறிவித்தபோதாவது, உடனடியாக அனைவரையும் அவரவர் ஊருக்கு அனுப்புவதில் மசூதி நிர்வாகம் முனைப்புக் காட்டியதா என்றால் அதுவும் இல்லை. இந்த மாநாடு கூடுவது முன்கூட்டியே தெரிந்திருந்தும் தில்லி அரசும், தில்லி காவல்துறையும் உடனடியாக அதைத் தடுக்கவும் முடக்கவும் செய்யாமல் இருந்தது மிகப்பெரிய தவறு.

ஊரடங்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து காவல் துறையினர் தப்லீக் ஜமாத் அமைப்பாளர்களிடம், மசூதியி லிருந்து அனைவரும் கலைந்து போகும்படி ஐந்து நாள்கள் கெஞ்சி இருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் இரவு நேரத்தில் நேரில் சென்று, நிலைமையை விளக்கி வேண்டிக்கொண்ட பிறகுதான், கூடியிருந்தவர்களைத் தனிமைப்படுத்தவும், மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவும் அனுமதித்திருக்கிறார்கள். ஜனநாயக இந்தியா இதை சகித்துக் கொண்டிருக்கிறது. 9,000-க்கும் அதிகமான தப்லீக் ஜமாத்தின் தொண்டர்களும் அவர்களது நெருக்கமான தொடர்புகளும் கரோனா நோய்த் தொற்றுக்காகத் தனிமைக் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக் கிறார்கள். இந்தியாவில் இதுவரை நோய்த்தொற்று பாதிப்புக்கு உள்ளானவர்களில் 500க்கும் அதிகமானவர்கள் தில்லி இஸ்லாமிய மாநாட்டில் பங்கு பெற்றவர்கள். தமிழகத்திலிருந்து மாநாட்டில் கலந்துகொண்ட 1,500 பேர்களில் 1200 பேர்தான் திரும்பியி ருக்கிறார்கள். திரும்பியவர்களில் 364 பேருக்கு நோய்த் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதும் பல்வேறு மாநிலங்களுக்குத் கரோனா நோய்த் தொற்றைக் கொண்டு சேர்த்த புண்ணியத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் தப்லீக் ஜமாத் தொண்டர்கள். அது குறித்து அவர்களுக்குக் கொசம்கூட வருத்தமோ, குற்ற உணர்வோ இல்லை என்பதுதான் ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது.

தில்லி லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 188 பேரில் பலர் தங்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யக்கூடாது என்று முரண்டு பிடிக்கிறார்கள். மருத்துவர்களையும் செவிலியர்களையும் சிலர் தாக்கியிருக் கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் மாநாட்டிலிருந்து திரும்பிய வர்களைப் பரிசோதிக்கச் சென்ற மருத்துவக் குழுவினரைக் கல் எறிந்து விரட்டி அடித்திருக்கிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் பல்வேறு மாநிலங்களில் நடந்திருக்கின்றன. தில்லி தப்லீக் ஜமாத் மாநாட்டில் கலந்துகொள்ள வெளிநாடுகளிலிருந்து 960 பேர் வந்திருக்கிறார்கள். மதப்பிரசாரம் செய்ய வெளிநாட்டி லிருந்து வருபவர்கள் அதற்கான நுழைவு அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆனால், சுற்றுலாப் பயணிகளுக்கான நுழைவு அனுமதி பெற்று தில்லி மாநாட்டுக்கு வந்தவர்கள் இந்தியா முழுவதும் சென்று பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களது நுழைவு அனுமதி இப்போது ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

ஊரடங்கு வேண்டுகோளை மீறும்படியும், சமூக இடை வெளியைக் கடைப்பிடிப்பது தேவையற்றது என்றும் தப்லீக் ஜமாத்தின் தலைவர் மௌலானா சாத் கந்தால்வியின் குரல் பதிவு வேண்டுகோள் இப்போது வெளியாகியிருக்கிறது. மௌலானா சாத் கந்தால்வி தலைமறைவாகியிருக்கிறார். தப்லீக் ஜமாத்தின் பொறுப்பற்றதனத்தையும், அவர்களால் ஒட்டுமொத்த இந்தியா வுக்கும் ஏற்பட இருக்கும் ஆபத்தையும் கண்டிப்பதை விட்டுவிட்டு, மதப்பிரச்னை ஆக்கக்கூடாது என்று அறிக்கை விடுகிறார்களே, அவர்களது பொறுப்பற்றதனத்தை என்னவென்று சொல்ல?

**- ஆசிரியர்**

# கொரோனா வைரஸ்

# சீனாவின் பயோவார் திட்டமா?

கொரோனா வைரஸ் சிக்கலை சமாளிப்பதற்காக 130 கோடி மக்கள் தொகை கொண்ட இந்தியா பொது நடமாட்ட முடக்கத்தை எதிர்கொண்டு வருகிறது. இது முன்னெப்போதும் கண்டிராத அளவுக்கு மிகப்பெரிய முடக்கமாகும். இந்நிலையில் உலக அளவில் இந்த கொரோனா வைரஸ் பரவியதற்கு சீனா எந்த அளவுக்குக் காரணமாக இருந்தது என்பதைப் பற்றி வல்லுநர்களும் ஊடகங்களும் விவாதிப்பது இந்தியாவில் நடந்து வருகிறது. இதன் ஊடாக சீனாவுக்கு எதிரான உரையாடல் இந்தியாவில் வளர்ந்து வருகிறது. சீனா இந்த கொரோனா வைரஸ் சிக்கலை சமாளித்த விதம் குறித்துக் குற்றஞ்சாட்டி இந்தியர்கள் பலர் ட்விட்டர் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் பதிவிட்டு வருகின்றனர்.




கொரோனா வைரஸ் என்பது உண்மையில் சீனாவின் ஓர் உயிரி ஆயுதத் திட்டமா என அவை விவாதிக்கின்றன. கொரோனா வைரஸ் பரவல் சீனாவில் தொடங்கியபோது இந்திய முன்னணி ஊடகங்கள் அது குறித்து செய்தி வெளியிட்ட விதம் பெரும்பாலும் கட்டுப்பாட்டோடும், சீன அரசாங்கம் குறித்து நடுநிலைத் தன்மையோடும் இருந்ததாகவே தோன்றியது. சில இந்தி சேனல்கள் மட்டும் விதிவிலக்காக கோவிட் 19 வைரஸ் என்பது சீனாவால் உருவாக்கப்பட்டது என்ற சரி பார்க்கப்படாத தகவலை விவாதித்துக் கொண்டிருந்தன.

ஆனால் இந்தியாவின் முன்னணி ஊடகங்கள், சீனாவின் கொரோனோ பாதித்த பகுதிகளிலிருந்து இந்தியர்களை வெளியேற்றுவது தொடர்பான தகவல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. இந்தியாவில் 21 நாட்கள் பொது நடமாட்ட முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், சீனாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நம்பகமான ஊடக நிறுவனங்களும், வல்லுநர்களும் விவாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. நடந்துவரும் சிக்கலுக்கு சீனா பொறுப்பேற்க வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் சீன வெளியுறவு அமைச்சர் வாங் இ உடன் ஒரு தொலைபேசி வழி உரையாடல் மேற்கொண்டதாகவும் அதில் கொரோனா வைரஸை ஒரு ‘சீன வைரஸ்’ என்று இந்தியா முத்திரை குத்தாது என்று அவர் ஒப்புக் கொண்டதாகவும் இந்தியாவுக்கான சீன தூதர் சன் வெய்டாங் மார்ச் 24ம் தேதி வெளியிட்ட ட்விட்டர் பதிவு ஒன்றில் தெரிவித்திருந்தார்.

ஆனால் கொரோனா பரவலை தவறாக கையாண்டது என்கிற குற்றச்சாட்டு முதல், சீனாவே அந்த வைரஸை உருவாக்கிப் பரப்பியது என்கிற குற்றச்சாட்டு வரை பலவிதமான குற்றச்சாட்டுகளைப் பல இந்திய ஊடகங்கள் சீனா மீது தற்போது சுமத்தி வருகின்றன. சீனாவே இந்த வைரஸை உருவாக்கி உலகம் முழுவதும் பரப்பியது என்ற குற்றச்சாட்டினை Chinese virus, Chinese virus-19 ஆகிய ஹேஷ் டேக்குகளை பயன்படுத்தி ட்விட்டரில் இந்தியர்கள் பலர் பரவலாக எழுப்பி வருகின்றனர். மார்ச் 25-ஆம் தேதி இந்திய அளவிலான முடக்கம் தொடங்கியதிலிருந்து இது நடக்கிறது.

கொரோனா வைரஸ் பரவி வரும் விதம், சீன அதிகாரிகள் வேண்டுமென்றே கவனக் குறைவாகவும், விட்டேற்றியாகவும் இருந்து உலகத்தையே ஆபத்துக்குள்ளாகியிருப்பதைக் காட்டுவதாக பிரபல பாதுகாப்பு மற்றும் தந்திரோபாயத் துறை விமர்சகர் நிதின் கோகலே ஒரு விமர்சனக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். இந்த ‘சீன வைரஸ்’ உலகம் முழுவதும் பரவி பாதிப்பை ஏற்படுத்தியதற்காக சீனாவின் தேசியத் தலைமையை மனித குலத்துக்கு எதிரான குற்றத்துக்குப் பொறுப்பாக்கும் பணியை உலக நாடுகள் செய்யவேண்டும் என்று அவர் மேலும் கூறியிருந்தார்.

சீனா உயிரி ஆயுதம் ஒன்றைப் பரிசோதித்ததன் விளைவே கொரோனா வைரஸ் என்று நிரூபிப்பது கடினம். ஆனால் கொரோனா வைரஸ் முதல் முதலில் பரவத் தொடங்கிய வுஹான் நகரில்தான் வைரஸ் ஆய்வுக்கான

மிகப்பெரிய ஆய்வகம் இருக்கிறது என்கிற உண்மையையும் புறக்கணிப்பது கடினம் என்றும், அந்த ஆய்வகத்தை சீனாவின் அரசு ஊடகங்கள் பெருமையாக கூறி வந்துள்ளன என்றும் பிரபல இந்தி நாளேடான தைனிக் ஜாக்ரனில் வெளியான ஒரு கட்டுரை கூறுகிறது.

சீனாவே இந்த வைரசை உருவாக்கியது என்றும் இப்போது அதற்கான மருந்துகளையும், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களையும் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலம் லாபம் சம்பாதிப்பதாகவும், பிரபல ஆங்கில செய்தி சேனலான இந்தியா டுடேவில் தொகுப்பாளராகப் பணியாற்றும் ஷிவ் ஆரூர் குற்றம்சாட்டினார்.

சீனா ஒரு நம்ப முடியாத, நயவஞ்சகமான நாடு என்றும் அது தற்போது உலகத்துக்கு ஒரு அச்சுறுத்தல் என்றும் குறிப்பிட்ட அவர் அது முதலில் சிக்கலை உருவாக்கிவிட்டு அதை தீர்ப்பதற்கான உலகின் முயற்சிகளிலிருந்து லாபம் சம்பாதிப்பதாகவும் குற்றம் சாட்டினார்.

பொருளாதார விவகாரங்களில் அவ்வப்போது பாஜக தலைமையிலான மத்திய அரசு ஆலோசனை கேட்கும் அமைப்பான இந்த சுதேசி ஜாக்ரன் மஞ்ச், கொரோனா வைரசின் பெயரை 'சீன வைரஸ்' என்று பெயர் மாற்றவேண்டும் என்று உலக சுகாதார நிறுவனத்தை வலியுறுத்துகிறது. அறக்கேடான முறையில் இந்த வைரஸை சீனா பரப்பியதாகவும் இப்போது மொத்த உலகமுமே ஆபத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா பரவல் விஷயத்தில் உலக சுகாதார நிறுவனம் எதிர்வினை ஆற்றிய முறையை இந்தியாவில் உள்ள பல சுயாதீன கருத்துருவாக்கிகள் விமர்சித்துள்ளனர். இந்தப் பிரச்சினையில் உலக சுகாதார நிறுவனம் மோசமான முறையில் எதிர்வினையாற்றியதாக சமீர் சரண் எனும் பிரபல பாதுகாப்பு விவகார விமர்சகர் ஒரு கட்டுரையில் கருத்து தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார நிறுவனம் போன்ற சர்வதேச அமைப்புகளில் சீனா தன்னுடைய செல்வாக்கை அதிகரித்துக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார். உலக சுகாதார நிறுவனத்தின் மிகையான சீன ஆதரவு போக்கு என்பது உலகம் முழுதும் உள்ள ஜனநாயக நாடுகளுக்கு ஒரு அவசர எச்சரிக்கை சமிக்ஞை என்றும் சரண் தெரிவித்துள்ளார்.




சீனாவுக்கு தொடர்ந்து நன்னடத்தை சான்றிதழ்களை வழங்கி வந்த உலக சுகாதார நிறுவனம் தற்போது உலகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளைப் பற்றி குறை கூறி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகப் பிரபல பத்திரிகையாளர் சேகர் குப்தா ஒரு யூடியூப் சேனலில் தெரிவித்துள்ளார்.

வைரஸ் பரவல் உலகை உலுக்கி வரும் இந்த நிலையில் பொய்களை பரப்புவதன் மூலம் இந்த வைரஸ் பிரச்சினை குறித்த பொது உரையாடலைக் கட்டுப்படுத்துவதற்குச் சீனா முயல்வதாக இந்தியாவிலுள்ள பல ஊடக நிறுவனங்களும் விமர்சகர்களும் குற்றம் சாட்டும் நிலை உருவாகியுள்ளது.

ஓபன் என்ற ஆங்கில மொழி பத்திரிக்கையில் ஒரு கட்டுரை எழுதிய பிரபல பாதுகாப்பு விவகார விமர்சகர் பிரம்மா சலானி "தனது பிராந்தியத்திலிருந்து பரவிய ஒரு வைரஸை கட்டுப்படுத்துகிற நடவடிக்கையில் தாம் தற்போது உலகத்துக்கே முன் மாதிரியாக இருப்பதாகப் பிரச்சாரம் செய்து சீனா என்னும் வணிக சின்னத்துக்குப் புதுமுகம் தர சீனா முனைப்புக் காட்டி வருகிறது" என்று அவர் கூறியுள்ளார்.

கொரோனா பரவல் குறித்த விமர்சனங்களை எதிர்கொள்ளச் சீனா தனது பிரச்சார இயந்திரங்களைப் பயன்படுத்தி வருவதாக WION என்ற ஆங்கில மொழி செய்தி சேனல் ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளது. சீனாவின் பிரச்சார இயந்திரம் என்பது பல்லாயிரக்கணக்கான போலி சமூக ஊடக கணக்குகளை உருவாக்கி உலக அளவில் சீனாவுக்கு ஆதரவான உள்ளடக்கங்களைப் பதிவிடுவதாக இருக்கிறது என்றும் அந்த சேனல் குறிப்பிட்டுள்ளது.

- S. **சுப்ரமணியன்**

# சிறு, குறு தொழில்களுக்கு நிமிர முடியாத பெரும் அடி

தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர் சங்கம் (சீமா) கடந்த 1952ம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த சீமா அமைப்பின் அங்கத்தினர்கள் தரமான பம்பு செட்டுகள் மற்றும் இன்ஜினியரிங் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர். இந்திய மற்றும் சர்வதேச அளவில் வீட்டு மற்றும் விவசாயத்திற்கு தேவைப்படும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்து வருகின்றனர். ஆனால் சமீப காலமாக பெரும் இழப்பை இந்த நிறுவனங்கள் சந்தித்து வருகின்றன.

இந்தியாவின் முதல் மோட்டார் மற்றும் பம்பு கோவையில் தான் 1930ல் தயாரிக்கப்பட்டது. இந்தியாவில் பம்பு செட் தேவையில் 55 சதவீதம் கோவை நிறுவனங்கள் பூர்த்தி செய்கின்றன. இவற்றின் சந்தை மதிப்பு சுமார் ₹16 ஆயிரம் கோடியாகும். கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் மத்திய மற்றும் மாநில அரசிற்கு சீமாவின் ஆதரவினை தெரிவித்து கொள்கின்றோம். சிறு,குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளினால் பொருளாதார இழப்பினை சந்திக்கின்றன. கொரோனா வைரஸ் பாதிப்பு மக்களை மட்டுமல்ல, எங்களை போன்ற வியாபாரிகளையும் முடக்கி வருகிறது. தற்போது ஏற்பட்டுள்ள மாறுபட்ட சூழ்நிலை மற்றும் தேக்க நிலைகளினால் பணப்புழக்கம் குறைந்துள்ளது. ஏற்கனவே, சிறுகுறு நிறுவனங்கள் படும்பாட்டை அறிந்து ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலம் சில நடவடிக்கை எடுத்ததற்கு பிரதமருக்கும், மத்திய நிதி அமைச்சருக்கும் சீமா சார்பில் நன்றியினை தெரிவித்து கொள்கின்றது.



மேலும், நிலைமைகளை சமாளிக்க சிறு,குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு மத்திய அரசு உதவ வேண்டும் என்று பிரதமர் மோடி மற்றும் மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்கு கடிதம் எழுதியுள்ளோம். சிறு குறு, நடுத்தர நிறுவனங்கள் பெற்றுள்ள கடன் மற்றும் புதிய கடன்களின் மீதான வட்டியினை வங்கிகள் மூலம் குறைக்க வேண்டும். புதிய வட்டியில்லாத விரைவான கடன்கள் இந்த பொருளாதார சரிவு சூழ்நிலைகளில் இருந்து மீள பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கும் கொரோனா பாதிப்புகளால் கொள்முதல் மற்றும் விற்பனையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த கடன்கள் நடப்பு மூலதனம் அல்லது விற்பனை சரக்குகளின் மதிப்பிற்கு வழங்கப்பட வேண்டும். இஎஸ்ஐ மற்றும் பிஎப் நிறுவனங்கள் செலுத்த 6 மாதம் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். பொருட்கள் நாடெங்கும் கொண்டு செல்ல ஏதுவாக போக்குவரத்து பாதிப்பு குறையும் வரை இ வே பில் விலக்கு அளிக்கப்பட வேண்டும். ஜிஎஸ்டி செலுத்த சிறுகுறு தொழில் நிறுவனங்களுக்கு 3 மாதம் கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும்.





சிறு,குறு பம்ப் செட் உற்பத்தி நிறுவனங்களுக்கு திருப்பி வழங்கப்பட வேண்டிய ஜிஎஸ்டி ரீபண்டுகளை உடனடியாக வழங்க வேண்டும். இதற்காக ஆவணங்களை பெறுவதையும் ஆய்வு செய்வதையும் தற்போது தவிர்க்க வேண்டும். ஜிஎஸ்டி மற்றும் ஐடி துறைகளில் நிறுவனங்களுக்கு அபராத தொகை வசூலிப்பதை ஒரு வருடம் நிறுத்தி வைக்க வேண்டும். மேலும், விவசாயிகளுக்கு மற்றும் பொது நுகர்வோர் அனைவருக்கும் பணப்புழக்கம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு நாங்கள் மீண்டும் வியாபாரத்தை நடத்த வேண்டும்; எங்களுக்கு ஏற்கனவே உள்ள கெடுபிடிகளுடன் கொரோனா பாதிப்புகளும் சேர்ந்து பெரும் அடி கொடுக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு தேவையான தீர்வுகளை அரசு தான் சொல்ல வேண்டும். இந்த சிறு குறு தொழில்கள் அழியாமல் காப்பது அரசுகளின் கைகளில் தான் உள்ளது.

பொருளாதார சரிவு சூழ்நிலைகளில் இருந்து மீள பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கும் கொரோனா பாதிப்புகளால் கொள்முதல் மற்றும் விற்பனையில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

\- **அகிலாண்டேஸ்வரி**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI MONTHLY MAGAZINE

# மக்கள் விசாரணை®

மக்களின் மனக்குமுறல் — மாத இதழ்

**லஞ்சம், ஊழல் விழிப்புணர்வு**

**ஆண்டு-08 இதழ்-11 ஏப்ரல் - 2020**

**ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன்ஸ்** சார்பாக
வெளியிடுபவர் & ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.(Hons).



ஆசிரியர் குழு
V. அருணாச்சலம், A.C. குமார், S. அனந்த கிருஷ்ணன், M.A.,

இதழியல் ஆலோசகர்
**P. ஆறுமுகம்**, B.Sc., A.E.M.S.A.C.,
Rtd. Sr. Audit Officer, Scientific Departments (C&AG of India) New Delhi

நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்**, B.B.A.,

**துணை ஆசிரியர்கள்**
K.ரமேஷ்குமார், D.ரவி, S.சரவணன்
P.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி
அ.மு.ரமணாத்திரி, S.சுப்ரமணியன்

**முதன்மை செய்தியாளர்கள்**
A.N.சேதுராமன் சென்னை, M.முருகம்மாள் திருப்பத்தூர்
P.தாமோதரன் சேலம், Dr. M.சத்தியராஜ் நாமக்கல்
S.செந்தில்குமார், குருபாலகிருஷ்ணன், R.ஜெயா சென்னை
A.D.ராஜேந்திரன் விழுப்புரம், S.மோகன்
P.சுப்பிரமணியன் திருநெல்வேலி

**நிருபர்கள்**
P.ராமலிங்கம், ஆப்ரகாம், K.L.ராஜேந்திரன்
S.ஏழுமலை, M.நிவேதிதா, N.சீனிவாசன்
Dr.K.ராஜமாணிக்கம், இர்வின், கனகதுர்கா
சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ்
சச்சின், B.நாராயணசாமி, C. அன்பழகன்
G.ராஜேஷ்கண்ணா, R.பார்த்தசாரதி
G.ஆனந்த்குமார், R. சத்தியமூர்த்தி
M.முருகன், M.சரவணன்

சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L., **M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

புகைப்பட நிருபர் : **M. அருணாச்சலம்**

இதழ் வடிவமைப்பு : **ஆப்பிள் பிரிண்டர்ஸ்**



நிர்வாக அலுவலகம்
**மக்கள் விசாரணை**
எண்: 7/13, பொன்மனசெம்மல் தெரு, 12வது தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
writermouriyan@gmail.com, news@makkalvisaranai.com
www.makkalvisaranai.com
93821 33334, 044 - 4861 5321

# அம்மா உணவகத்தில் ஆய்வு செய்த முதல்வர் பழனிசாமி



நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நிலையில், பொதுமக்கள் தேவைக்காக தமிழகத்தில் அம்மா உணவகங்கள் இயங்கி வருகிறது. இந்நிலையில், சென்னை சாந்தோமில் உள்ள அம்மா உணவகத்திற்கு நேரில் சென்ற முதல்வர் எடப்பாடி பழனிசாமி திடீர் ஆய்வு மேற்கொண்டார். அம்மா உணவகத்தில் ஆய்வு செய்தப்பின் செய்தியாளர்களிடம் பேட்டியளித்த முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அம்மா உணவகத்தில் உரிய இருப்பு உள்ளதா என்பது குறித்தும், உணவின் தரம், சமையல் அறை சுத்தமாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு நடத்தினேன் என்றார். அம்மா உணவகத்தில் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது குறித்தும் விசாரணை நடத்தியதாக கூறினார்.

அம்மா உணவகத்தில் உணவு தரமாகவும், சுவையாகவும் இருந்ததாக முதல்வர் பாராட்டு தெரிவித்தார். பல்வேறு மாநிலங்களில் பாராட்டப்பட்ட அம்மா உணவக திட்டம் இன்று மக்களுக்கு கைகொடுக்கிறது. அம்மா உணவகங்களில் மட்டும் தான் ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி தரப்படுகிறது. ஓட்டல்களில்







அதிகவிலைக்கு உணவு விற்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும். மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் தான் கொரோனா பரவலை தடுக்க முடியும். கொரோனா தொற்றின் தாக்கத்தை அறியாமல் மக்கள் வெளியே வருகின்றனர். அரசின் சட்டத்தை பொதுமக்கள் மதிக்க வேண்டும். தமிழகத்தில் 17 ஆயிரம் படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன.

டெல்லி சென்று திரும்பியவர்கள் தாங்களாகவே முன் வந்து பரிசோதனைக்கு ஒத்துழைக்க வேண்டும். 199 நாடுகள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உள்ளன. கொரோனா பாதிப்பு உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சையை தமிழக அரசு அளித்து வருகிறது. தமிழகத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு 124 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொரோனா அறிகுறி இருந்தால் ஈஷா கூட்டத்தில் பங்கேற்றவர்களையும் சோதனைக்கு உட்படுத்துவோம். ஒவ்வொரு உயிரும் அரசுக்கு முக்கியம் அதனால்தான் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஏப்ரல் 14ஆம் தேதிக்கு பிறகு ஊரடங்கு நீட்டிக்கப்படுமா என்பது குறித்து மத்திய அரசு தான் முடிவு செய்யும் என்றும் கூறினார்.

**- வீ. சிவசங்கர்**

முனைவர் ஆ.மவுரியன்



தொடர் 29

வீரத்தமிழச்சிகளின் வரலாறு



## தமிழின் முதல் பெண் நாவலாசிரியர்

# வை. மு. கோதைநாயகி

**சுதந்திர போராட்டத்தில் சிறை சென்றவர்களை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பி காந்திய பாதைக்குக் கொண்டு சென்றவர்**

ஒவ்வொரு கைதியையும் தனித்தனியாக சந்தித்து அவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்ட காரணங்களைக் கேட்டு அவற்றை நாவலாக எழுதத் தொடங்கினார். சிறைக்கைதிகளை வன்முறை பாதையிலிருந்து திசை திருப்பி காந்திய பாதைக்குக் கொண்டு செல்ல முயன்றார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். சிறையில் இருந்தபோது "சோதனையின் கொடுமை", "உத்தமசீலன்" ஆகிய புதினங்களை எழுதினார். இவர் சிறையில் இருந்த போது ஜகன்மோகினி இதழை இவரது கணவர் வை.மு.பார்த்த சாரதி தொடர்ந்து நடத்தினார்.

இரண்டாவது உலகப்போரின் போது ஏற்பட்ட அச்சம் காரணமாக மக்கள் பலரும் சென்னையை விட்டு வெளியேறினர். வை.மு. கோ. அம்மையாரும் "ஜகன்மோகினி' அச்சகத்தோடு சென்னைக்கு அடுத்த செங்கல்பட்டு அருகேயிருந்த சிங்கபெருமாள் கோயில் எனப்படும் சிற்றூரில் குடியேறினார். ஜகன்மோகினி வெற்றிக்கு அதில் சித்திரம் வரைந்த சாமுவேல் என்ற ஓவியர் ஒரு காரணமாவார். இவர் இறுதிவரை ஜகன்மோகினி சிறப்பாக வெளிவர உறுதுணையாக இருந்தார். நாடு விடுதலை அடைந்தவுடன் மீண்டும் சென்னைக்கே "ஜகன்மோகினி' அலுவலகத்தையும் அச்சகத்தையும் அம்மையார் கொண்டுவந்தார்.

1930 களில் அம்மையார் 'டாக்கி' என்று அக்காலத்தில் சொல்லப்பட்ட திரைப்படத்துறை யிலும் முத்திரை பதித்துள்ளார். வை.மு.கோ.அம்மையார் திரைப்படத் தணிக்கைக் குழுவின் உறுப்பினராகப் பத்தாண்டுகள் பணியாற்றினார். அவர் தணிக்கைக் குழு உறுப்பினராக இருந்தபோது, தாம் தணிக்கை செய்த காட்சிகள் மீண்டும் திரைப்படங்களில் இடம்பெற்றுள்ளனவா என்பதை அறிந்து கொள்ள அத்திரைப்பட அரங்கிற்குத் தன்னை யாரும் அறியாமல் இருக்கத் தலையில் முக்காடிட்டுக் கொண்டு சென்று படம் பார்ப்பது வழக்கம். 'அதிஷ்டம்' என்ற திரைப்படத்தில் தான் தணிக்கை செய்த காட்சிகள் மீண்டும் திரையிடப்பட்டிருப்பதை அறிந்து அப்படத்தை மீண்டும் தணிக்கை செய்ய அனுப்பினார். இவ்வாறு தாம் செய்யும் பணிகளை மிகுந்த ஈடுபாட்டுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் செய்தார்.

கோதை நாயகியின் நாவல்கள் பல பிற்காலத்தில் திரைப்படங்களாக எடுக்கப்பட்டன. அவரது 'அனாதைப் பெண்' என்ற நாவலை ஜுபிடர் பிக்ஸர்ஸ் நிறுவனம் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டது. அம்மையாரின் 'தயாநிதி' என்ற நாவல் சித்தி என்ற பெயரில் வெளிவந்து மிகுந்த புகழ் பெற்றது. மேலும் ராஜமோகன் (1937), தியாகக்கொடி, நளினசேகரன், (1966) போன்ற படங்கள் குறிப்பிடத்தக்கன. 'சித்தி' படத்துக்கான சிறந்த 'கதையாசிரியர் விருது' கோதைநாயகிக்கு அவர் இறந்த பின் வழங்கப்பட்டது.

வை.மு.கோ அம்மையார் இலவசமாக குழந்தைப்பேறு மருத்துவம் பார்ப்பதும் உண்டு. தமது உறவினர்களுக்கு மட்டுமின்றி தன்னை நாடிவந்து குழந்தைப்பேறு பார்க்க வேண்டும் என்று யார் அழைத்தாலும் சாதி சமய வேறுபாடின்றி அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று மருத்துவம் பார்ப்பார். இந்தியா சுதந்திரம் பெற்ற அன்று அம்மையார் அதனைச் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தார். 1948ஆம் ஆண்டு சனவரி 30ஆம் நாள் காந்தி மறைந்த பின்பு 13ஆம் நாள் அவரது சாம்பல் நாடெங்கும் கடலில் கரைக்கப்பட்டது. சென்னையில் நடந்த சாம்பல் கரைப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமமையார் காந்தியின் நினைவாக மார்ச்சு மாதம் 2ஆம் நாளன்று மகாத்மாஜி சேவா

சங்கம் என்ற சங்கத்தைத் திருவல்லிக்கேணியில் தொடங்கினார். அச்சங்கத்தின் வாயிலாக ஏழை களுக்கும் ஆதரவற்ற குழந்தைகள், பெண்களுக்கும் பல்வேறு உதவிகளைச் செய்தார். வை.மு.கோ.அம்மையாரின் தேசிய சேவையைப் பாராட்டி காங்கிரஸ் அரசாங்கம் அவருக்குச் செங்கல்பட்டுக்கு அருகே 3 ஏக்கர் நிலமும் மற்றொரு இடத்தில் 7 ஏக்கர் நிலமும் வழங்கிச் சிறப்பித்தது. ஆனால் அவ்வாறு தனக்குக் கிடைத்த நிலத்தைப் பூமிதான இயக்கத்திற்காக வினோபாவேயிடம் அம்மையார் வழங்கிவிட்டார்.

1956ஆம் ஆண்டில் அம்மையாரின் ஒரே மகனான ஸ்ரீநிவாசன் திடீரென்று இறந்தார். அவரது மறைவு அம்மையாரை நிலைகுலைய வைத்து விட்டது. பெண்களின் வழிகாட்டியாக, சிறந்த விடுதலைப்போராட்ட வீராங்கனையாக, நாடக ஆசிரியராக, நாடக இயக்குநராக, இசை வல்லவராக, பத்திரிக்கை ஆசிரியராகப் பன்முக ஆற்றலுடன் விளங்கிய நாவல் ராணியாகிய வை.மு.கோதைநாயகி அம்மாள், தன் மகன் இறந்து தான் மட்டும் இருக்கிறோமே என்று வருந்தி சரியாக உணவு உண்ணாமல் உறக்கமின்றி உடம்பை வருத்திக் கொண்டார். அதனால் அம்மையார் கொடிய காச நோய்க்கு ஆளானார். தாம்பரம் காசநோய் மருத்துவ மனையில் உரிய சிகிச்சை பெற்றும் பலனின்றி 1960ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20ஆம் நாள் மருத்துவ மனையிலேயே இறந்தார்.

ஜகன் மோகினி இதழில் வெளிவந்த வை.மு. கோதைநாயகி அம்மாளின் சில படைப்புகள்

வைதேகி (1925 – 4 பதிப்புகள்)
பத்மசுந்தரன் (1926 – 3 பதிப்புகள்)
சண்பகவிஜயம் (1927 – 2 பதிப்புகள்)
ராதாமணி (1927 – 4 பதிப்புகள்)
கௌரிமுகுந்தன் (1928 – 2 பதிப்புகள்)
நவநீதகிருஷ்ணன் (1928 – 2 பதிப்புகள்)
கோபாலரத்னம் (1929)
சியாமளநாதன் (1930 – 2 பதிப்புகள்)
சுகந்த புஷ்பம் (1930)
ருக்மணிகாந்தன் (1930)
வீர வசந்தா அல்லது சுயேச்சையின் பரிபவம் (1930)
நளினசேகரன் அல்லது செருக்காலழிந்த சீமாட்டி (1930)
உத்தமசீலன் (1932 – 3 பதிப்புகள்)
கதம்பமாலை (1932 – 2 பதிப்புகள்)
பரிமள கேசவன் (1932 – 2 பதிப்புகள்)
மூன்று வைரங்கள் (1932 – 2 பதிப்புகள்)
காதலின் கனி (1933 – 2 பதிப்புகள்)
சோதனையின் கொடுமை (1933 – 2 பதிப்புகள்)
படாடோபத்தின் பரிபவம் (1933 – 2 பதிப்புகள்)
சாருலோசனா (1933 – 3 பதிப்புகள்)
தியாகக்கொடி (1934 – 2 பதிப்புகள்)
புத்தியே புதையல் (1934 – 2 பதிப்புகள்)
ஜயசஞ்சீவி (1934 – 4 பதிப்புகள்)
அமிர்த தாரா (1935 – 4 பதிப்புகள்)
ஆனந்தசாகர் (1935 – 3 பதிப்புகள்)



பட்டமோ பட்டம்(1935 – 2 பதிப்புகள்)
பிச்சைக்காரக் குடும்பம் (1935 – 2 பதிப்புகள்)
பொங்கும் காதல் அல்லது மங்களபாரதி (1935 – 2 பதிப்புகள்)
அநாதைப் பெண் (1936 – 4 பதிப்புகள்)
இன்பஜோதி (1936 – 2 பதிப்புகள்
பிரேம பிரபா (1936 – 2 பதிப்புகள்)
ராஜமோஹன் (1936 – 2 பதிப்புகள்)
அன்பின் சிகரம் (1937 – 2 பதிப்புகள்)
சந்திர மண்டலம் (1937 – 2 பதிப்புகள்)
மாயப் பிரபஞ்சம் (1937 – 2 பதிப்புகள்)
உளுத்த இதயம் (1938)
மகிழ்ச்சி உதயம் (1938 – 4 பதிப்புகள்)
மாலதி (1938 – 3 பதிப்புகள்)
வத்ஸகுமார் (1938 )
வாழ்க்கையின் நாதம் அல்லது வானக்குயில் (1938)
ஜீவியச்சுழல் (1938 – 2 பதிப்புகள்)
கலா நிலையம் (1941 – 4 பதிப்புகள்)
க்ருபா மந்திர் (1934 – 4 பதிப்புகள்)
மதுர கீதம் (1943 – 4 பதிப்புகள்)
வாத்சல்யம் அல்லது வாக்குத் தத்தம் (1943 – 3 பதிப்புகள்)
அமுத மொழி (1944)
பிரார்த்தனை (1945 )
அபராதி (1946 – 2 பதிப்புகள்)
தெய்வீக ஒளி (1947 – 2 பதிப்புகள்)
புதுமைக் கோலம் (1947)
தபால் வினோதம் (1945 – 2 பதிப்புகள்)
கானகலா (1950)
தூய உள்ளம் (1950)
நியாய மழை (1950)
ப்ரபஞ்ச லீலை (1950)
ப்ரேமாஸ்ரமம் (1950)
மனசாட்சி (1950)
ஜீவநாடி (1950)
சௌபாக்கியவதி (1950)
நம்பிக்கைப் பாலம் (1951 – 2 பதிப்புகள்)
பாதாஞ்சலி (1951)
ரோஜாமலர் (1951)
தைரியலக்ஷ்மி (1952)
சுதந்திரப் பறவை (1953)
நிர்மல நீரோடை(1953)
கிழக்கு வெளுத்தது (1958)

**தொடரும்**

# வங்கிகளின் நம்பகத்தன்மை?

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் வங்கித் துறை சார்ந்து இரு பெரும் மோசடிகள். முதலில் 'பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா கூட்டறவு வங்கி' (பிஎம்சி) ஊழல் காரணமாக ஆறு மாதங்களுக்கு அதன் செயல்பாட்டை முடக்கியது ரிசர்வ் வங்கி. அதன் வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்கில் இருந்து ஆயிரம் ரூபாய்க்கு மேல் பணம் எடுக்க கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. மறுதினம் பிஎம்சி கிளைகளை மக்கள் சூழ்ந்தனர். அங்கு முதலீடு செய்திருந்தவர்கள் பெரும்பாலும் சிறு, குறு வியாபாரிகள், அடித்தட்டு மக்கள். தங்கள் பணத்தை எடுக்க முடியாது என்ற செய்தியை அவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை. அதிர்ச்சியில் ஐந்து பேர் உயிர் இழந்தனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய அந்த நிகழ்வு முடிந்து சில மாதங்கள்கூட ஆகவில்லை, மீண்டும் அதேபோன்றொரு நிகழ்வு சமீபத்தில் அரங்கேறியிருக்கிறது. ஆனால், இம்முறை பெரும் தொழில் அதிபர்களுக்கான ஒரு தனியார் வங்கியில்.

தனியார் வங்கிகளில் முதன்மையான 5 வங்கிகளில் ஒன்றாக திகழ்ந்த யெஸ் வங்கி, நிர்வாகப் பொறுப்பின்மையின் காரணமாக தற்போது திவால் நிலைக்கு ஆளாகி உள்ளது. இந்நிலையில் அவ்வங்கியை சீரமைக்கும் முயற்சியாக தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது ரிசர்வ் வங்கி. அதன்படி மார்ச் 5 முதல் ஏப்ரல் 3 வரை அதன் வாடிக்கையாளர்கள் தங்கள் வைப்புத் தொகையிலிருந்து ரூ.50,000-க்கு மேல் எடுக்க கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.




தவிர, இவ்வங்கி புதிதாக யாருக்கும் கடன் வழங்கவும் கூடாது. யெஸ் வங்கியின் இயக்குநர்கள் குழுவை கலைத்துவிட்டு ரிசர்வ் வங்கி தனது பிரதிநிதியை நியமித்துள்ளது. தற்போதைய நிலையில் யெஸ் வங்கியை மீட்டெடுக்க குறைந்தபட்சம் ரூ.20,000 கோடி தேவை. இந்தச் சூழலில் யெஸ் வங்கியை வாங்க பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ) முன்வந்துள்ளது. அதன்படி, யெஸ் வங்கியின் 49 சதவீதப் பங்குகளை எஸ்பிஐ வாங்க உள்ளது. அசுர வேகத்தில் வளர்ந்து வந்த ஒரு வங்கி எவ்வாறு இத்தகைய பாதாளத்துக்குச் சென்றது?

**ஆரம்பம்:** ராணா கபூர், அசோக் கபூர் ஆகிய இருவரால் யெஸ் வங்கி 2004-ம் ஆண்டு தொடங்கப்படுகிறது. அசோக் கபூரின் மனைவியின் சகோதரியைத்தான் ராணா கபூர் திருமணம் செய்திருக்கிறார். அந்த வகையில் இருவரும் உறவினர். வங்கியின் தலைவராக அசோக் கபூரும், தலைமை நிர்வாக அதிகாரியாக ராணா கபூரும் பொறுப்பைப் பிரித்துக்கொண்டனர். குறுகிய காலத்திலேயே வங்கி பெரும் வளர்ச்சியை எட்டுகிறது. இந்தச் சூழலில் வங்கியின் போக்கையே மாற்றியமைக்கும் வகையிலான சம்பவம் ஒன்று 2008-ல் நடந்தது. மும்பை தாஜ் ஹோட்டலில் நடைபெற்ற தாக்குதலில் அசோக் கபூர் கொல்லப்படுகிறார். அதன் பிறகு வங்கியின் முழுக்கட்டுப்பாடும் ராணா கபூரின் கீழ் வருகிறது.

**சூதாட்டக்களம்:** தான் நினைத்ததை முடிக்க எந்த எல்லைக்கும் செல்லக்கூடியவர் ராணா கபூர் என்று சொல்கிறார்கள். திவால் நிலையில் இருக்கும் நிறுவனங்கள், எந்த வங்கிகளும் கடன் அளிக்க முன்வராத நிறுவனங்கள் போன்றவற்றுக்குக் கடன் அளிப்பதே யெஸ் வங்கியின் தனிச் சிறப்பாக அடையாளப்படுத்தப்படுவது உண்டு. கடனுக்குப் பெறப்படும் முன்தவணைத் தொகை, வட்டி இவற்றின் மூலம் அதிக லாபம் ஈட்ட முடியும் என்பது ராணா கபூரின் கணக்கு.

கடனை வரைமுறையின்றி வாரி இறைக்கிறார் என்றால், அதற்கேற்றாற்போல் அதைத் திருப்பி வசூலிப்பதிலும் கடுமை காட்டுபவர். திவாலான

'கிங்ஃபிஷர்', 'டெக்கன் கிரானிக்கிள்' போன்ற நிறுவனங்களிடமிருந்து மற்ற வங்கிகள் தங்கள் கடனை வசூலிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த நிலையில், ராணா கபூர் அவரது வங்கி அளித்த கடனை வசூல் செய்துகாட்டினார். அது அவரை வங்கித் துறையில் தனித்த நபராக அடையாளம் காட்டியது.

ஆனால் இவை எதையும் அவருடைய திறமையாக, உத்தியாக கருதுவதற்கில்லை. ஏனென்றால் ஒவ்வொரு துறைக்கும் அதன் இயல்பு சார்ந்து சில நடைமுறைகள் இருக்கின்றன. ஆனால், ராணா கபூருக்கு அவை எதுவும் பொருட்டல்ல. அவருடைய செயல்பாடுகளைத் தொகுத்துப் பார்க்கையில் அவர் வங்கியை ஒரு சூதாட்டக்களமாகவே அணுகியிருக்கிறார் என்றே தெரிகிறது.

**வீழ்ச்சி:** திவால் நிலைக்கு உள்ளாகக்கூடிய சூழலில் இருக்கும் நிறுவனங்களுக்கு மட்டுமே யெஸ் வங்கி ரூ.10 ஆயிரம் கோடிக்கு மேல் கடன் வழங்கி இருக்கிறது. ஆனால், தங்கள் வாரா கடன் அளவு 1 சதவீதத்துக்கும் குறைவு என்றே அது கூறிவந்தது. இந்நிலையில், 2016-ல் வங்கிகள் தங்கள் கடன் அறிக்கையைச் சமர்ப்பிக்க ரிசர்வ் வங்கி உத்தரவிட்டது. வங்கிகள் அளிக்கும் தகவல்களை ரிசர்வ் வங்கி மறுமதிப்பீடு செய்யும். அப்போது யெஸ் வங்கி அதன் வாராக் கடன் ரூ.750 கோடி என்று தெரிவித்தது. ஆனால் ரிசர்வ் வங்கி ஆய்வு செய்ததில் யெஸ் வங்கியின் மொத்த வாராக் கடன் ரூ.4,925 கோடி என்று கண்டறியப்பட்டது. இதன் பிறகுதான் யெஸ் வங்கியின் மீதான சந்தேகம் வலுப்பெற்றது.

நிலைமை மோசமடையவும், 2018-செப்டம்பரில், தலைமை நிர்வாக அதிகாரி பொறுப்பில் இருந்து ராணா கபூர் விலக வேண்டிய சூழல் ஏற்படுகிறது. ராணா கபூரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக ரவ்னீத் கில் கடந்த ஆண்டு மார்ச் மாதம் பொறுப்பேற்கிறார். வங்கியின் நிதி நிலையை உயர்த்தும் பொருட்டு பல்வேறு கட்ட முயற்சிகள் அதன்பிறகு மேற்கொள்ளப்பட்டன. ஆனால், எதிர்பார்த்த அளவில் முதலீடுகள் வராததன் காரணமாக நெருக்கடிநிலை தொடர்ந்தது. இந்தச் சூழலில்தான் யெஸ் வங்கி தற்போது ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.




**கண்துடைப்பு நடவடிக்கை:** தற்போது ராணா கபூர் கைது செய்யப்பட்டுள்ளார். திவால் ஆகிவிட்ட திவான் ஹவுஸிங் பைனான்ஸ் (டிஹெச்எஃப்எல்) என்ற வீட்டு வசதி கடன் நிறுவனத்துக்கு சுய லாபநோக்கு அடிப்படையில் முறைகேடாக கடன் வழங்கினார் என்ற காரணத்துக்காக. ஆனால், இந்த விவகாரம் எல்லாம் இரண்டு வருடங்களுக்கு முன்பே நடைபெற்றவை. தற்போது யெஸ் வங்கியின் நிதிநிலை பெரும் சரிவைச் சந்தித்த நிலையிலேயே டிஹெச்எஃப்எல் விவகாரம் கையில் எடுக்கப்படுகிறது. மோசடி நடைபெற்ற காலங்களில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முற்படாமல், தற்போது நிதிநெருக்கடி தீவிரமடைந்த நிலையில் அந்த மோசடி வழக்கில் ராணா கபூரை கைது செய்வது கண்துடைப்பு நடவடிக்கையே தவிர வேறில்லை.

**தாமதிக்கும் ரிசர்வ் வங்கி:** இவ்விவகாரத்தைப் பொறுத்தமட்டில் ரிசர்வ் வங்கி பொறுப்பேற்க வேண்டிய இடத்தில் உள்ளது. தற்போதைய நடவடிக்கை மிகத் தாமதமான ஒன்று. 2014-ம் ஆண்டிலேயே யெஸ் வங்கி நெருக்கடிக்கு உள்ளாகத் தொடங்கிவிட்டது. அந்தக் காலகட்டத்தில் அதன் மொத்தக் கடன் ரூ.55,000 கோடியாக இருந்தது.

2019-ல் அது ரூ.2.41 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. வெறும் ஐந்தே ஆண்டுகளில் கிட்டத்தட்ட ரூ.2 லட்சம் கோடி கூடுதலாகக் கடன் கொடுத்துள்ளது. யெஸ் வங்கிக்கு நிதி அளவை உயர்த்துவதற்கு கால அவகாசம் வழங்கி தொடர்ந்து கண்காணித்து வந்ததாகவும், ஆனால் அதன் நிர்வாகம் உரிய தீர்வை எட்டாததால் தற்போது ரிசர்வ் வங்கி தலையிட வேண்டியுள்ளது என்றும் அதன் கவர்னர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

\- **A.N.** சேதுராமன்

# வள்ளலார் அருளிய

# காயகல்பம்

Dr. K. ராஜமாணிக்கம்

**நவமூல நிர்மூல மாத்திரை: குப்பை மேனி -100 ரத்த மூலம் & மூலகடுப்புக்கு**

*ஓமம் 6 பங்கு, இந்துப்பு 3 பங்கு, கடுக்காய் தோல் 15 பங்கு, சுக்கு 17 பங்கு, வால்மிளகு 5 பங்கு, அரிசி திப்பிலி 4 பங்கு*

*ஓமம், கடுக்காய்தோல், வால்மிளகு, திப்பிலி பொன் வருவலாய் தனித்தனியே வறுத்துக் கொள்ளவும். சுக்குவை மேல் தோல் நீக்கி பொடித்துக் கொள்ளவும். இந்துப்பை பொடித்து லேசாக வறுத்துக் கொள்ளவும்.எல்லாம் ஒன்றாக கலந்து வஸ்திரகாயஞ் செய்து புட்டியில் அடைக்கவும்.*

*அளவு - வெருகடி*

*அனுபானம்: தயிரில் கலக்கி காலை மாலை ஒரு மண்டலம் சாப்பிட ரத்தமூலம் சரியாகும்.*

**பஞ்ச தீபாக்கினி சூரணம்**

*சுக்கு - 50 கிராம், மிளகு - 50 கிராம், திப்பிலி - 50 கிராம், சீரகம் - 50 கிராம், ஏலம் - 50 கிராம், கற்கண்டு - 250 கிராம்*

*மேலுள்ள மருந்துகளில் கற்கண்டை தவிர்த்து மீதி மருந்துகளை முறைப்படி சுத்தி செய்து இடித்து சலித்து பிறகு கற்கண்டை பொடித்து பிறகு அனைத்தையும் ஒன்று சேர்த்து புட்டியில் அடைக்கவும்.*

*அளவு : 1 முதல் 2 கிராம் வரை*

*அனுபானம் : நெய், தேன், வெந்நீர்*

*பயன்கள் : பசியின்மை, செரியாமை, மயக்கம், கிறுகிறுப்பு, மூல வாயு, உடல் உஷ்ணம், அசீரணம், எலும்பு சுரம், அஸ்தி வெட்டை, வாயு, பித்தம், வெப்ப நோய், சூலை, பித்த வாயு, கப நோய் மேலும் பல நோய்கள் குணமாகும்.*

*குறிப்பு : புளி, கசப்பு சுவையுள்ள உணவுகளை தவிர்த்தால் மேலான பலனை காணலாம். இது எளிய முறை வீட்டிலே செய்யலாம்.*

*காயசித்திக்கான கரு: 'மலைமேல் இருந்து மாங்காய் பால் குடிப்போர்க்கு தேங்காய் பால் ஏதுக்கடி குதம்பாய் தேங்காய் பால் ஏதுக்கடி' என்று போகிற போக்கில் ஒரு கருத்தை சொல்லி விட்டு போகிறார் சித்தர், வாசியோகம் கைவரப்பெற்று மேருவில் இருந்து அமுதப்பால்*



*அருந்துவோர்கள், காயசித்தி மருந்துகளை உண்ண வேண்டிய அவசியம் இல்லை என்று கூறுவது போல் காயசித்திகான கரு வை கூறிவிட்டார் சித்தர். சிவ சிவ*

*'கூடத்தில் இருப்பது*
*குழந்தை விளையாடுவது*
*கூட்டித்தள்ளுவது முப்பு'*

**பீனிச சூரணம்** (Sinus)

*பொருட்கள்: சுக்கு,மிளகு, திப்பிலி, கண்டங் கத்தரி, சங்கம் வேர்பட்டை, செங்கத்தாரி, கொடிவேலி வோர்பட்டை*

*வகைக்கு 10 கிராம்*

*சுக்கை மேல் தோல் சீவவும், மிளகு, திப்பிலி இவைகளை லேசாக வருத்துக்கொல்லவும். இவைகளை அனைத்தையும் அரைத்து சூரணம் செய்து கொள்ளவும். காலை மாலை 1கிராம் அளவு வெந்நீரில் சாப்பிடவும்.*

*தீரும் நோய்கள்: ஜலதோஷம், தும்மல், கபம், சளி, மூக்கில் இரத்தம், மூக்கில் நாற்றம், காதில் சீழ் வடிதல் ரத்தம் வருதல் தினவு, வயிற்றுப் பொருமல், அஜீரணம், பீனிச நோய்கள் தீரும்.*

*நவமூல நிர்மூல மாத்திரை*

*1.குப்பைமேனி சூரணம் - 100*
*2.கவிழ்தும்பை சூரணம் - 100*
*3.திரிபலா சூரணம் - 100*
*4.பிரண்டை பற்பம் - 50*
*5.நத்தை பற்பம் - 30*
*6.ஆமையோடு பற்பம் - 30*
*7.நாக பற்பம் - 30*
*8.படிகார பற்பம் - 30*

*செய்முறை: மேற்கண்டவற்றை நன்கு பொடித்துக் கலந்து ஜீரோ சைஸ் கேப்ஸூலில்*

போட்டு காலை மாலை உணவுக்கு முன் பாலுடன் சாப்பிட்டு வர ஒன்பது வகையான மூல நோய்களும், மூலத்தில் ஏற்படும் வெடிப்பு, ரணம், புண் பசியின்மை, வயிற்றில் இரைச்சல், வயிரு உப்பல், ஏப்பம், அஜீரணம், பசியின்மை போன்றவை குணமாகும்.மூலநோயில் ஏற்படும் வலி நான்கு நாட்களில் நின்று போகும்.அதாவது நான்கு நாட்களில் இம்மருந்தின் பலனைக் காண முடியும்.

**சுகபேதி லேகியம். (அல்வா):** சுத்தமான உண்மையான தேனில் பிங்க் நிற ரோஜா பூ (பன்னீர் பூ) போட்டு தயாரித்த குல்கந்து 840கி, சூரத்து ஆவாரை 175கி, ரோஜா மொட்டு பன்னீர் பூமொட்டு175கி, திராட்சை 105கி, பாதாமி 105கி, கடுக்காய் பூ 35கி இவற்றை நயம் தேன் விட்டுக் கலந்து நன்கு அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

பயன்கள்: மலம், நீர் நன்றாக சுகமாக வெளியாகும். மலச்சிக்கல் தீரும். இடுப்பு முழங்கால், குதிகால் வலிகள், வெள்ளைப்படுதல், உஷ்ணம், மூலச்சூடு, வயிற்றுப் புண், வயிற்றுக் கடுப்பு மற்றும் நவமூல நோய்களும் குணமாகும். உண்பதற்கு ருசியானது. இம் மருந்தை தனியாகவே குழந்தைகள் முதல் பெரியோர் வரை மலச்சிக்கல் உள்ளவர்கள் பயன்படுத்தி குணம் பெறலாம்.

**அனுபவ முறை விழுதி இலை கற்பம்**

தேவையான பொருட்கள்: 1.விழுதியிலை - 5 கிலோ, 2.சுக்கு, 3.மிளகு, 4.திப்பிலி, 5.சீரகம், 6.அதிமதுரம், 7.கோஷ்டம், 8.ஏலம், 9.வால் மிளகு, 10.இலவங்கம், 11.நாட்டு மாட்டு பால் - 3 லிட்டர், 12.நாட்டு மாட்டு நெய் - 100 கிராம், 13.பனை ஓலைப்பாய்.

குறிப்பு: கடைசரக்குகள் அனைத்தும் சுத்தி செய்தே பயன்படுத்தவும். 7 முறை பால் ஆவியல் சுத்தி செய்வது மிகச் சிறப்பான பலன் தருகிறது.

(விழுதியிலை, பால், நெய், பனை ஓலை பாய் தவிர மற்ற சரக்குகள் வகைக்கு 50 கிராம்)

செய்முறை: முதலில் மண்பானையில் சிறிது விழுதியிலை போட வேண்டும். பின் அதன் மீது மேற்கண்ட சரக்குகளை தூவ வேண்டும், பின் மீண்டும் விழுதியிலையை இவற்றின் மீது பரப்ப வேண்டும் பின் மீண்டும் மற்ற சரக்குகளை தூவ வேண்டும். இப்படியாக ஒன்றன் மேல் ஒன்றாக அனைத்தையும் பானையில் பரப்ப வேண்டும் பின் பால் 3 லிட்டர் ஊற்றி மெலிதான தீயில் வேக வைக்க வேண்டும். விழுதியிலை நன்கு



வெந்து வாசனை வரும் இதுவே பதம். பின் அதனை பனை ஒலைப்பாயில் பரப்பி காய வைத்து அரைத்து சீலையில் சலித்து கொள்ளவும். சூரணமாக 1 கிலோ முதல் 1.700, வரை கிடைக்கும் இந்த சூரணத்தை நாட்டு மாட்டு நெய் 100 கிராம் விட்டு கிளறி காற்று புகாத டப்பாவில் அடைத்து பயன்படுத்தவும்.

சூட்சமம்: இதைபாலில் வேக வைத்து கண்டிப்பாக பனை ஓலைபாயில் மட்டுமே காய வைக்க வேண்டும். அவ்வாறு காய வைக்கும் போதும் அடிக்கடி பிரட்டி போட வேண்டும் இல்லை எனில் பூஞ்சை பிடித்து விடும்.

மிக முக்கிய சூட்சமம்: குருமருந்து வைத்து இருப்பவர்கள் 20 கிராம் சேர்த்து வேக வைத்து பயன்படுத்த மிக அற்புத கற்பம் இதுவே.

அனுபானம்: காலை வெறும் வயிற்றில்,இரவு சாப்பிட்ட பின் தேன் (அ) நெய் கலந்து அரை ஸ்பூன் சாப்பிடவும்.

திரும் நோய்கள்: 6 மாதம் உண்ண நரை, திரை, முப்பு அண்டாது.

ஆண்களுக்கு: மண்டலம் உண்ண உடல் பலவீனம், விந்து நீர்த்து போதல், தேவையற்ற கொழுப்பு கரையும், உடல் இறுகும், நரம்பு பலம் பெறும், மூச்சு இரைக்காது, உடல் களைப்பு ஏற்படாது, உஷ்ணம் இல்லாமல் போகும், விந்து கட்டும்.

விளையாட்டு துறையில் உள்ளோர்க்கும், உடற்பயிற்சி மையம் செல்வோரும் இதை பயன்படுத்த அற்புத பலன் தெரியும். வயதானவர்கள் இதை உண்ண உடல் பலவீனம் சரியாவது உறுதி

பெண்களுக்கு: கருப்பபை வாயு, கருபப்பை வலி, கருபப்பை கட்டி, கருப்பபை புழு, கருப்பை குற்றம் நீங்கும், வெள்ளை, வெட்டை சூடு நீங்கும்.

- தொடரும்

உலகை அச்சுறுத்தும் கொடிய வைரஸாக உருவெடுத்துள்ள கோவிட்-19, ஒரு புதிய பாடத்தை மக்களிடம் விதைத்துள்ளது. தனி நபர் சுகாதாரம் மட்டுமின்றி சுற்றுப்புற தூய்மை மிகவும் அவசியம் என்பதுதான் அது. தான் மட்டும் சுத்தமாக இருந்தால் போதாது, சுற்றுப்புறமும் தூய்மையாக இல்லாவிடில் பாதிப்புக்குள்ளாக நேரிடும் என்பதை உலகிற்கே உணர்த்தியுள்ளது. இந்தியாவிலும் நாளுக்கு நாள் கோவிட்-19 வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாவோர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அரசும் இந்த நோயைக் கட்டுப்படுத்துவது மற்றும் நோயைக் கண்டறிவதற்கான சாதனங் களை வாங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்த வைரஸ் பரவும் வேகம் மிக அதிகமாக உள்ளது. அதை ஈடுகட்ட பரி சோதனை மையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

ரத்த மாதிரி சேகரிப்பு மையங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டியது கட்டாயமாகியுள்ளது. இத்தகைய சூழலில் அரசுக்கு உதவ தனியார் நிறுவனங்களும் முன்வரலாம். ஏனெனில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையின் வேகத்தைவிட நோய் பரவும் வேகம் அதிகமாக உள்ளது.

தற்போதைக்கு ஒரு லட்சம் பரிசோதனை கருவிகள் இருப்பில் உள்ளதாகவும் கூடுதலாக வாங்கவும் தயாராக உள்ளதாகவும் தெரிவித் துள்ளது. இதுபோன்ற சமயங்களில் இத்தகைய சோதனை கருவிகளை உள்நாட்டிலேயே தயாரிப்பது மேலும் பலனளிக்கும். அதிக எண்ணிக்கையிலான உற்பத்திக்கும் வழி வகுக்கும்.

இதன் மூலம் அதிக அளவிலான மக்களைப் பரிசோதித்து நோய் தாக்குதல் இல்லாதவர்களை அடையாளம் காண முடியும். தங்களுக்கு நோய்இல்லை என்பதே மனதளவில் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும். இது கோவிட்-19 வைரஸ் பீதியால் ஏற்பட்டுள்ள மன உளைச்சலிலிருந்து விடுபட வழியேற்படுத்தும்.

தற்போது இந்தியாவில் 52 சோதனை மையங்களும், 56 ரத்த மாதிரி சேமிப்பு மையங்களும் உள்ளன. இவை அனைத்துமே அரசு மையங்களாகும். இதற்கு முன்பு சார்ஸ் தொற்று பரவியபோது ஏற்படுத்தப்பட்டவை. தற்போது கோவிட்-19 வைரஸ்தோற்றுநோய் சோதனைக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

அரசும் தனியார் வசம் உள்ள பரிசோதனை மையங்களுக்கு அங்கீகாரம் அளித்து அவற்றிலும் நோய் கண்டறிதல் சோதனை நடத்த அனுமதிக் கலாம். நோய் கண்டறியும் மையங்கள்



# தனியார் நிறுவனங்களையும் ஈடுபடுத்தலாமே!

அதிகரிப்பதன் மூலம் வைரஸ் தொற்றுக்கு ஆளானவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கலாம். இதன் மூலம் அவர்களால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும்.

பரிசோதனை மையங்களில் இரண்டு வகையில் சோதனை நடத்தப்படுகின்றன. ஒன்று ரத்த மாதிரி மற்றொன்று சளியை எடுத்து பரிசோதிப்பது. இத்தகைய சோதனைகளின் முடிவுகள் 24 மணி நேரத்துக்குப் பிறகு வெளியாகின்றது. அமெரிக்காவில் உள்ள மயோ கிளினிக் மற்றும் தென் கொரியாவில் உள்ள சீஜின் உயிரி மருந்து ஆய்வகத்தில் கோவிட்-19 வைரஸ் தொற்றை 4 மணி நேரத்தில் கண்டறியக்கூடிய அதி நவீன தொழில்நுட்பம் உள்ளது. இந்திய விஞ்ஞானிகளும் இதுபோன்று விரைவாக நோய் கண்டறியும் நுட்பத்தை கண்டுபிடிக்குமாறு அறிவுறுத்தலாம்.

தனியார் பரிசோதனை மையங்களில் சோதனை நடத்துவதற்கான கட்டணம் அதிகமாக இருக்கும். அது தவிர்க்க முடியாது. ஆனால் அத்தகைய கட்டணத்தை செலுத்த வசதி படைத்தவர்கள் செலுத்தட்டும். மற்றவர்களுக்கானதை நிறுவனங்கள் செலுத்தலாம். நிறுவனங்கள் சமூக பொறுப்புணர்வுக்காக (சிஎஸ்ஆர்) செலவிடும் நிதியில் குறிப்பிட்ட தொகையை இதுபோன்ற கொடிய நோய் தொற்றை கண்டறியும் நடவடிக்கைகளுக்கும் செலவிடலாம். அரசு தனியார் பங்கேற்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கும் போதுதான் நோயின் தீவிரம் குறையும்.

'எத்தகைய நெருக்கடியும் ஒருபோதும் வீணாகப் போனது இல்லை' என்ற வின்ஸ்டன் சர்ச்சிலின் வாசகம்தான் நினைவுக்கு வருகிறது. கோவிட்-19 வைரஸ் தாக்குதலும் உலக அளவில் மிகப் பெரிய மாறுதலுக்கு வழிவகுத்துள்ளது. தனி நபர் சுகாதாரம் மட்டுமல்ல, சுற்றுப்புற தூய்மையும் அவசியம் என்பதை இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு உணர்த்தியுள்ளது. இனியாவது சாலையில் எச்சில் உமிழ்வது, சிறுநீர் கழிப்பது போன்ற அநாகரிக செயல்கள் குறையும் என்று நம்பலாம்.

- K. ரமேஷ்குமார்


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை * அருணை முரசு**

**Cell : 93821 33334 / 044 - 48615321**

**Email : writermouriyan@gmail.com**

# சிந்தனை முத்துக்கள்



இன்று முதல்
ஏப்ரல் 14 வரை
நாடு முழுவதும்
சுங்க கட்டணம் ரத்து
BREAKING NEWS
Power
குடும்ப கட்டுப்பாடு பண்ணி
விட்டுட்டு பிரசவத்துக்கு
இலவசமுனு சொன்னா
எப்படிங்க




இந்த சீரியலயே பாத்துட்டு இருக்காத
போய் டீ போட்டு கொண்டு வா
#hus
#Wife
இது சரிப்பட்டு வராது பால் இல்லனு
சொல்லி வெளிய அனுப்பி அடிவாங்க
வச்சிரவேண்டியதுதான்





கேரளாவில் கணவருக்கு வந்த
கொரானா மனைவிக்கு வராமல்
கொழுந்தியாவிற்கு வந்ததால்
பரபரப்பு !
செய்தி
மனைவி




இருப்பவன் கொண்டாடுறான்
இல்லாதவன் திண்டாடுறான்.
இவ்வளவு தான் ஊரடங்கு..




டெங்கு
திமுக
கொரானா
HIV
யாரு டா நீங்க..?
ஏய்...விடு..விடு..அவனும் நம்மள
மாதிரி உயிர்கொல்லி வைரஸ் தான்...

" ஒருநாள், ஏதோ
ஒரு காரணத்தினால்
எங்கிருந்தோ வரும்
உணவு நிறுத்தப்படலாம்.
வாகனங்கள் ஓடுவதும்
கப்பல்கள் மிதப்பதும்
விமானங்கள்
பறப்பதும் கூட
நிறுத்தப்படலாம்.
ஆனால் உனக்கான
உணவை, நீ உற்பத்தி
செய்ய பழகியிருந்தால்,
இதையெல்லாம் எண்ணி நீ
அஞ்ச வேண்டியதில்லை "
- நம்மாழ்வார்




கொரோனா விழிப்புணர்வு மீம்ஸ்
வேகமாக பரவும் மாஸ்டர் போஸ்டர்




இன்னைக்கு பொழுது போகாம மிக்சரை தனித்தனியா பிரிச்சு,
பிஸ்கட்ல இருக்குற ஓட்டையை எல்லாம் எண்ணுறவன் யாரு...
போன வாரம் வரைக்கும் தூங்கக்கூட நேரமில்ல.. எந்திரத்தனமா
ஓடிட்டு இருக்கோம்னு ஸ்டேடஸ் போட்டவன் தான்!

காணாமல் போனவர்களை தேடலாம் அதில் சிறிதும் தவறு இல்லை.
ஆனால் கண்டும் காணாமல் போனவர்களை மட்டும் நீ தேடி விடாதே.
உன் தேடல்களில் அவர்கள் இல்லை என்று நினைத்துக்கொள்



























# தமிழக பாஜக தலைவருக்கு காத்திருக்கும் சவால்கள்

பாஜக மாநிலத் தலைவராக எல்.முருகன் நியமிக்கப்பட்டது தமிழகத்தில் பலரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்நிலையில் பல்வேறு சவால்களை அவர் எதிர்கொள்ள வேண்டி உள்ளது. தமிழக பாஜக தலைவராக இருந்த தமிழிசை சவுந்தரராஜன் தெலங்கானா மாநில ஆளுநராக நியமிக்கப்பட்ட பிறகு, கடந்த ஆறரை மாதங்களாக அப்பதவி காலியாகவே இருந்தது. மத்தியில் பாஜக ஆட்சியில் இருப்பதால் அக்கட்சியின் மாநிலத் தலைவர் பதவிக்கு கடும் போட்டி இருந்தது. பொன்.ராதாகிருஷ்ணன், சி.பி.ராதாகிருஷ்ணன், ஹெச்.ராஜா, வானதி சீனிவாசன், நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட 10-க்கும்மேற்பட்ட தலைவர்கள் தங்களுக்கு மாநிலத் தலைவர் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டனர்.

பாஜக தேசிய இணை அமைப்பு பொதுச் செயலாளர் சிவ் பிரகாஷ், தேசிய செய்தித் தொடர்பாளர் நரசிம்ம ராவ் ஆகியோர் கடந்த ஜனவரி 5-ம் தேதி சென்னையில் மாநில நிர்வாகிகள், துணை அமைப்புகளின் மாநில நிர்வாகிகளிடம் மாநிலத்தலைவர் தொடர்பாக கருத்துகளை கேட்டனர் அப்போது ஒருவர்கூட எல்.முருகன் பெயரைச் சொல்லவில்லை. மாநிலத் தலைவருக்கான போட்டியில் 20-க்கும் அதிகமானோரின் பெயர்கள் அடிபட்டன. அதிலும் எல்.முருகன் பெயர் இல்லை. ஆனாலும் அவர் மாநிலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பிராமணர்களின் ஆதிக்கம் நிறைந்த கட்சியாக விமர்சிக்கப்படும் பாஜகவில் எஸ்.சி. பிரிவைச் சேர்ந்த எல்.முருகனுக்கு சிறப்பாக செயல்பட்டு, அந்த விமர்சனத்தை தகர்க்க வேண்டிய பொறுப்பும் உள்ளது.

திராவிட கட்சிகள் கோலோச்சும் தமிழகத்தில் எத்தனை முயற்சி செய்தும் பாஜகவால் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை. 1996-ல் கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபுரம் தொகுதியில் தனித்து வென்று சட்டப்பேரவைக்குள் அடியெடுத்து வைத்த பாஜக, 2001-ல் திமுக கூட்டணியில் 4 எம்எல்ஏக்களைப் பெற்றது. 1998-ல் அதிமுக கூட்டணியில் 3 எம்.பி.க்கள், 1999 திமுக கூட்டணியில் 4 எம்.பி.க்கள்,

2014-ல்தேமுதிக, பாமக, மதிமுக ஆகிய கட்சிகளுடன் அமைத்த கூட்டணியில் 1 எம்.பியை பாஜக பெற்றது. மற்றபடி 3 சதவீத வாக்கு வங்கியைத் தாண்ட அக்கட்சியால் முடியவில்லை. இந்நிலையில் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள முருகனுக்கு பல்வேறு சவால்கள் காத்திருக்கின்றன. வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது 1999-ல் தலித் சமூகத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்.பி.கிருபாநிதி பாஜக மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்டார். அரசியல் அனுபவம் இல்லாத அவரால் கட்சியில் அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்பட முடியவில்லை. அப்போது மாநில அமைப்பு பொதுச்செயலாளராக இருந்த இல.கணேசனுக்கும், அவருக்குமான மோதல் வெளிப்படையாகவே பேசப்பட்டது. கடைசியில் கிருபாநிதி திமுகவில் இணைந்தார்.

இதுதொடர்பாக பாஜக நிர்வாகிகளிடம் பேசியபோது, "கிருபாநிதிக்கு இருந்த சிக்கல்கள் முருகனுக்கு இல்லை. கிருபாநிதி அரசியல்வாதி அல்ல. ஆனால், பள்ளிக்காலம் முதலே அரசியல் ஆர்வம் கொண்டவர் முருகன். படிப்படியாக தன்னை அரசியலில் கட்டமைத்துக் கொண்டவர். கிருபாநிதிக்கு பாஜக தேசிய தலைவர்களுடன் நெருக்கமோ, நேரடித் தொடர்போ இல்லை. ஆனால், தற்போதைய குடியரசுத் தலைவர்ராம்நாத் கோவிந்த் பாஜக தேசிய எஸ்.சி. அணித் தலைவராக இருந்தபோது, மாநில எஸ்.சி. அணித் தலைவராக இருந்தவர் முருகன். இருவரும் வழக்கறிஞர்கள் என்பதால் அவர்களுக்குள் நெருங்கிய நட்பு உருவானது.



பாஜக எஸ்.சி. அணி தேசியசெயலாளராக இருந்தபோது கட்சியின் மேலிடத் தலைவர்களுடனான தொடர்பை மேலும் வலுவாக்கிக் கொண்டார். தேசிய பட்டியலினத்தோர் ஆணையத்தின் துணைத் தலைவராக இருந்தததால் பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, தேசியத் தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோருடன் நேரடித் தொடர்பும் ஏற்பட்டது. இதனால் முருகனின் பணி கடினமாக இருக்காது" என்றனர்.

பாஜக மாநில அமைப்பு பொதுச் செயலாளராக இருக்கும் கேசவ விநாயகம், திருச்சி கோட்ட ஆர்எஸ்எஸ் அமைப்பாளராக இருந்த காலம் முதலே முருகனை அறிந்தவர். அவரின் அரசியல் வளர்சிக்கும் காரணமானவர் என்றுபாஜகவில் பலரும் கூறுகின்றனர்.

ஆனால், தமிழக பாஜகவில் இல.கணேசன், பொன். ராதாகிருஷ்ணன், எச். ராஜா, சி.பி.ராதாகிருஷ்ணன் என்று பல்வேறு கோஷ்டிகள் உள்ளன. இவர்களை சமாளிப்பதுதான் முருகனுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும்என்கின்றனர். பாஜக மாவட்டத் தலைவர்கள் அனைவரும் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் முருகனுக்கு எந்தஅளவுக்கு ஒத்துழைப்பார்கள் என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

மாநிலத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முருகன் தனது முதல் பணியாக மாநிலதுணைத்தலைவர், பொதுச்செயலாளர், செயலாளர், பொருளாளர் என்று மாநில நிர்வாகிகளை நியமிக்க வேண்டும். அவர்களைக் கொண்டுதான் அவர் கட்சிப் பணியாற்ற வேண்டியிருக்கும். மூத்த தலைவர்களை சமாளிக்க வேண்டியிருக்கும். 42 வயதில் மாநிலத் தலைவராகியிருக்கும் முருகனுக்கு சாதகமான அம்சங்கள் பல இருந்தாலும் சவால்களே அதிகம் காத்திருக்கின்றன. இவற்றை எப்படி எதிர்கொள்ளப் போகிறார் என்பதற்கு காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

**- M. முருகம்மாள்**

# குழப்பங்களின் பிடியில்

கரோனா வைரஸ் தாக்குதலின் பதற்றத்தை ஒன்றுமில்லை என்று எண்ண வைத்துவிட்டன சமீபத்திய தமிழ்த் திரையுல நிகழ்வுகள். ஒரு பக்கம், காஷ்மீரிலும் கேரளத்திலும் கரோனா தடுப்பு நடவடிக்கையாகத் திரையரங்குகளை மூடி உத்தரவிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலோ, தமிழ்த் திரைப்பட விநியோகஸ்தர்களே முன்வந்து தங்கள் கூட்டமைப்பின் சார்பில் 'வரும் மார்ச் 27-ம் தேதி முதல் புதிய பட வெளியீடு இருக்காது' என்று அறிவித்திருக்கிறார்கள். கரோனா பயம் தீவிரமாக இல்லை என்ற நிலையில் எதற்காக இந்தத் திடீர் தடா?

விஜயின் 'மாஸ்டர்', சூர்யாவின் 'சூரரைப் போற்று', நயன்தாராவின் 'மூக்குத்தி அம்மன்' ஆகிய படங்கள் கோடை விடுமுறை வசூலைக் குறிவைத்து வரிசையாக வெளியீட்டுத் தேதியை முடிவுசெய்திருக்கும் இந்த நேரத்தில் அவற்றைத் தடுத்தால்தான் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று அவர்கள் நினைத்திருக்கிறார்கள். தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம் என்ற ஒன்று தற்போது இருந்தும் இல்லாமல் இருப்பது, விநியோகஸ்தர்களின் தயக்கமின்மைக்குக் காரணம் என்றாலும், அவர்கள் முக்கியக் காரணம் என்று சொல்வது சினிமா டிக்கெட்டுகளின் மீதான டி.டி.எஸ், கேளிக்கை வரிச்சுமை.

**வருமானத்துக்கு வரி:** 'விநியோகஸ்தர்கள் படங்களை விநியோகித்து அதன் மூலம் வரும் வருவாய்க்கு விதிக்கப்படும் 10 சதவீத டி.டி.எஸ் (TDS) வரியை முற்றிலுமாக ரத்துசெய்ய வேண்டும் என்றும், இதற்கு மத்திய அரசு ஒத்துழைக்க வேண்டும்' என்று முதல் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

அதேபோல், தற்போது நடைமுறையில் இருக்கும் திரையரங்க நுழைவுக் கட்டணங்களுக்கான ஜி.எஸ்.டி (12%) வரியுடன் கூடுதலாக உள்ளாட்சி அமைப்புகளுக்கு எல்.பி.டி எனும் (8%) கேளிக்கை வரியை தனியே செலுத்துவதால் திரையரங்குகளுக்கு வரும் பார்வையாளர்களுக்கும் இது கூடுதல் சுமையாக அமைகிறது என்றும் எனவே, அந்த வரியையும் (8%) முற்றிலும் ரத்து செய்யத் தமிழக அரசு முன்வர வேண்டும்' என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

முன்னணிக் கதாநாயகர்களின் படம் வெளிவரும்போது கேளிக்கை வரியாகக் கோடிகளில் வருமானம் வருவதை அரசு இழக்க விரும்புமா என்பது தெரியாத நிலையில், வரவிருக்கும் சட்டப் பேரவைத் தேர்தலை ஒட்டிக் கேளிக்கை வரியில் சலுகையைப்



பெற்றுவிட முடியாதா என்ற அவர்களின் முனைப்பும் ஆதங்கமும் தெரிகின்றன.

**தணிக்கையும் ரசனையும்:** பெரிய படங்களுக்கான வெளியீடுகளில் இப்படிச் சிக்கல் முளைத்திருக்கிறது என்றால், கருத்துச் சுதந்திரத்துடன் செயல்படும் படைப்பாளி களுக்குத் தமிழ் சினிமாவில் தணிக்கையும் அரசியலும் புதிய சவால்கள் ஆகியிருக்கின்றன. சமீபத்தில் வெளியான 'திரௌபதி', 'ஜிப்ஸி' ஆகிய இரண்டு படங்களை இதற்கு உதாரண மாகக் கூறலாம். ஒரு பக்கம் சாதிரீதியாக ஒடுக்கப்பட்டவர்களின் வலியைப் பேசும் திரைப்படங்கள் அதிகரித்திருக்க, அவற்றுக்கு எதிர்நிலையில் நின்று 'நாடகக் காதல்' என்ற ஒன்றை சித்தரிக்க முயன்ற 'திரௌபதி' படம் கவனத்தைப் பெற்றிருக்கிறது.

இந்தப் படம் இதுவரை பத்துக் கோடி ரூபாயைத் தாண்டி வசூலித்துக்கொண்டிருப்பது பார்வையாளர்கள் மத்தியில் சாதி எப்படி வினையாற்றுகிறது என்பதைப் பட்டவர்த் தனமாகக் காட்டியிருக்கிறது. இதற்குமுன் சாதிப் புகழ்பாடும் படங்களும் கதாபாத்திரங்களும் தமிழ்த்திரைப்படங்களில்இடம்பெற்றிருந்தாலும், இந்தப் படம் உருவாக்கியிருக்கும் அலை, சினிமா எனும் கலையை அதன் அடிப்படையான நோக்கத் திலிருந்து கீழிறக்கக் கூடியது என்ற நடுநிலை விமர்சனங்கள் கவலையுடன் குவிந்து வருகின்றன.

அதேபோல் மத அடிப்படைவாத அரசியலின் விளைவுகள் பற்றிப் பேசிய 'ஜிப்ஸி' திரைப்படம் ஓராண்டுக்கு முன்னரே தயாரானபோதும் தணிக்கை, மறுதணிக்கை, தணிக்கை நடுவர் மன்றம் என இழுத்தடிக்கப்பட்டது. எந்தத் தீர்வும் கிடைக்காத நிலையில் 40க்கும் அதிகமான வெட்டுகள், சமூகத்தின் ஒரு தரப்பைச் சுட்டுகிறது என்ற காரணத்துடன் படத்தில் இடம்பெற்ற சில காட்சிகளின் வண்ணத்தைக் கறுப்பு வெள்ளையாக மாற்றியது எனத் தனது படைப்பின் முழுமையை இழந்து திரையரங்குகளில் வெளியாகி வரவேற்பைப் பெறமுடியாமல் போய்விட்டது. அரசியல் சார்ந்த விஷயங்களைப் படைப்பாளிகள் தொட்டால், அது ஆளும் வர்க்கத்துக்கு எதிர் நிலையில் இருந்தால் இங்கே அசலான அரசியல் சினிமாவே இனி எடுக்க முடியாதா என்ற கேள்வி யைத்தான் சிறகொடிந்த 'ஜிப்ஸி' எழுப்பியிருக்கிறது.

**ஆட்டி வைக்கிறதா அரசியல்?:** படங்களில் எதிரொலிக்கும் அரசியலுக்கே இந்த நிலை என்றால், நேரடியாக அரசியலில் இறங்க நினைக்கும் முன்னணி நடிகர்களின் நிலை இன்னும் இக்கட்டாக மாறிக்கொண்டு வருகிறது.




கிட்டத்தட்ட சினிமா ஓய்வு பெறல் என்ற இடத்துக்கு வந்துவிட்ட ரஜினியின் அரசியல் அறிவிப்பு வழக்கம்போல் விவாதங்களைக் கிளப்பிக்கொண்டிருக்க, தற்போது வசூல் நாயகர்களாக இருக்கும் விஜய் போன்ற நடிகர்கள் தங்கள் படங்களில் அரசியல் கருத்துகளைப் பேசினாலும் அது பல வகைகளில் பிரச்சினைக்கு உள்ளாவது 'சர்கார்', 'பிகில்' தொடங்கித் தொடர்ந்து நடந்துவருகிறது.

விஜய் வீட்டில் நடத்தப்பட்ட வருமானவரிச் சோதனைகளின் பின்னால் ஆட்டி வைக்கும் அரசியல் இருப்பதாகப் பேசப்பட்ட நிலையில், அவர், நடித்திருக்கும் 'மாஸ்டர்' படத்தின் இசை வெளியீட்டு விழா நடக்க இருக்கிறது. 'அதில் விஜய்சேதுபதி வேண்டுமானால் விரிவாகப் பேசலாம்; விஜய் படத்தைப் பற்றிக்கூடப் பேசுவாரா என்பது சந்தேகம்தான். அவ்வளவு மன உளைச்சலுக்கு ஆளாகப்பட்டிருக்கிறார்' என்கிறார்கள்.

இன்னொரு பக்கம், நடிகர் சங்கம், தயாரிப்பாளர் சங்கத் தேர்தல்களின் முடிவில் எதிர்க்கட்சித் தலைவரைப் போய்ப் பார்த்து பூங்கொத்து கொடுத்தார் என்பதற்காகவே இரண்டு சங்கங்களிலும் செயல்பட முடியாத நிலைக்கு விஷால் தள்ளப்பட்டார் என்றும் விவாதிக்கப்பட்டது.

இருப்பினும், தற்போது தயாரிப்பாளர் சங்கம், நடிகர் சங்கம் இரண்டு அமைப்புகளும், நீதிமன்றத் தீர்ப்பு, தேர்தல் மூலம் மீண்டு எழும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இவை மீண்டு எழுந்தால்தான் தமிழ்த் திரையுலகம் எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கும் நிலையிலிருந்தும் குழப்பங்களின் பிடியிலிருந்தும் மீள முடியும்.

**- கனகதுர்கா**

தொடர் இழப்புகளைக் கடந்து

# தேன் தயாரிப்பில் கோடி லாபம் ஈட்டும் ஜோஸ்பின்!

கணவரும், மகளும் அடுத்தத்தடுக்க இறக்க, தொடங்கிய தொழில் இருந்த இடம் தெரியாமல் அழிய நேர்ந்த ஒரு பெண் என்ன செய்வாள்? பதறிஅடித்து தீராத்துயருக்குள் தன்னை கொண்டுச் சென்று முடங்கிவிடுவாள். உண்மையில் ஜோஸ்பின் ஆரோக்கிய மேரி அதைத் தான் செய்தார். ஆனால், அவரை மீட்டெடுத்து வந்தன அவர் ஆசையாய் வளர்த்த தேவதை எனும் தேனீக்கள்! ஆம், பத்து ஆண்டு களாய் தேனீ வளர்ப்பில், திகட்டாத வருமானம் ஈட்டிவரும் ஜோஸ்பின், 1800 பேரை தொழில் முனைவோர்களாக்கி, ஆண்டுக்கு 3 கோடி ரூபாய் டர்ன் ஓவர் செய்கிறார்.

பிறந்த ஊர் சிவகங்கையில் உள்ள முத்துப்பட்டி. வாக்கப்பட்ட ஊர் மதுரை கடச்சனேந்தல் கிராமம். பிளஸ் டூ படிச்சு முடித்தவுடனே எனக்கு கல்யாணம் ஆகிருச்சு. புகுந்த வீட்டுக்கு வந்தபிறகு தான், பி.ஏ படித்தேன். கணவர் வீட்டில் பொருளாதார நெருக்கடி. பய்யன், பொண்ணு இரண்டுபேருமே வளர்ந்துட்டாங்க எதாச்சும் வேலை வாய்ப்பு இருக்கானு நியூஸ் பேப்பரில் தேடி பாத்திட்டு இருந்தப்ப தான், மதுரை வேளாண் அறிவியல் மையத்தில் தேனீ வளர்ப்பு இலவச பயிற்சி கொடுக்கிறதா செய்தி இருந்தது. நானும் பயிற்சியில் கலந்துகிட்டேன். பத்துப் பெட்டி களை கொண்டு தேனீ வளர்க்க ஆரம் பித்தேன், எனும் அவர் வசம், அச்சமயத்தில் சொந்தத்தோட்டம் இல்லாதக்காரணத்தால், ஊரில் உள்ள அப்பாவின் தோட்டத்தில் பெட்டிகளை வைத்திருக்கிறார்.

ஜோஸ்பினின் தந்தை ரிட்டையர்ட் தலைமை ஆசிரியரும், இயற்கை விவசாயியும். 100 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்துவந்துள்ளார். அங்கே பெட்டிகளை வைத்துவிட்டு வாரம் ஒரு முறை மட்டும் சென்று தேன் சேகரித்து வந்துள்ளார். முதல் முறையிலே 8 கிலோ தேன் கிடைத்தது, புது ஊக்கத்தை தந்ததுடன் ஜோஸ்பின் தேனீ வளர்க்கும் சேதி ஊர் முழுக்க பரவியுள்ளது.




தேசிய வேளாண் இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் தேனீ பெட்டிகள் வழங்குவதற்கு ஜோஸ்பினிடம் கேட்டுள்ளனர். அவரும் ராணித் தேனீக்களை பிரித்தெடுத்து, தேனீ பெட்டிகளை உருவாக்கி 62 பெட்டிகளை வழங்கியுள்ளார்.

தேன் சேகரித்து விற்பனை செய்வதை காட்டிலும், தேனீக்களாகவே வணிகம் செய்தால் வருமானம் ஈட்டாலம் என்பதை உணர்ந்த அவர், ஒரு லட்சம் ரூபாய் கடன்பெற்று பெட்டிகளை தயாரித்துள்ளார். அச்சமயத்தில், அவருடைய மகளது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. ஓடியாடி விளையாடுக் கொண்டிருந்த குழந்தையின் கால் எலும்பில் ஏற்பட்ட முறிவுக்கு சிகிச்சை எடுக்கும் போது தான், எலும்பு புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளாள் என்பதை தெரிந்துள்ளனர்.

“ரொம்ப கஷ்டமான காலம் அது. நல்லா இருந்த பிள்ளைக்கு திடீர்னு இப்படி ஒரு வியாதினா எப்படி ஏத்துக்கொள்வது. இருக்க நகைய அடகு வைத்து, கடன் வாங்கி 3 லட்சம் வரைக்கும் செலவு செய்தோம். ஆனால், பிழைப்பது சிரமம்னு முன்பே கூறிவிட்டனர். அவளும் எங்களை விட்டு போயிட்டாள். சில மாதங்களுக்கு பிறகு, தேனீப்பெட்டிகளை சென்று பார்த்தால் எறும்புகள் மோய்த்து வீணாய் போகிவிட்டன. என் கணவரும் உடல்நலம் பாதித்து இறந்துவிட்டார். வாழ்க்கையே முடிந்துவிட்டது, இனி என்ன யிருக்கு... யாருக்காக உழைக்க னும்னு வாழ்க்கையே வெறுத்து போயிருச்சு...”

எனும் ஜோஸ்பின் பேசுகையிலே, சோகம் நம்மை ஆட்கொள்கிறது. கணவனும், மகளும் பிரிந்த துயரத்தில் வீட்டின் மூலையிலே அடைந்துகிடந்த அவரை, தோட்டக் கலை அதிகாரிகளும், உறவுக்காரர் களும் ஊக்கம் தந்து மீண்டு வருவதற்கு தேனீ வளர்ப்பினை மீண்டும் முயற்சிக்க வலியுறுத்தி யுள்ளனர். மற்றவர்களின் வாழ்க்கையில்



முன்னேற வழிவகுத்து கொடுப்பதுடன், அழிந்து வரும் தேனீக்களை காக்க களமிறங்கியுள்ளார்.

10 லட்ச ரூபாய் வங்கியில் லோன் பெற்று 1000 தேனீ பெட்டிகளுடன் "விபிஸ் இயற்கை தேனீ பண்ணையை" அமைத்துள்ளார். சிவகங்கை கண்மாய்களில் வளர்ந்துகிடந்த நாவல் மரங்களுக்கு மத்தியில் பெட்டியினை வைத்து, நாவல்தேனை சேகரித்துள்ளார். கசப்பும், இனிப்புமாய் இருந்த நாவல் தேன் சர்க்கரை நோயாளிகளுக்கு சிறந்தது என்று ஆய்வுகள் கூறியதால், நாவல்தேன் விற்பனை நன்கு நடந்துள்ளது. அதிலிருந்து வேம்புத்தேன், காப்பித்தேன், நாவல்தேன், முருங்கைத்தேன் என பத்துவிதமான தனிமலர்த் தேனை உற்பத்தி செய்துள்ளார். அதாவது, 2 கி.மீ பரப்புக்கு முருங்கை மரங்கள் வளர்ந்து கிடந்தால், அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இருந்து சுத்த முருங்கைத்தேனை பெறலாம்.

"விறுவிறுக்க சுறுசுறுப்பாய் தேனீக்கள் வேலை செய்து, தேனை சேகரித்தாலும் நாம் அதை அலுங்காமல், குலுங்காமல் அரைமணி நேரத்தில் சேகரித்துவிடலாம். அதிக நேரம் செலவு செய்யத் தேவையில்லை. பெரும் இடம் தேவையில்லை. முதலீடும் அதிகம் தேவையில்லை."

ஜோஸ்பின் 7,000 தேனீ பெட்டியிலிருந்து மாதம் 5,000 கிலோ முதல் 7,000 வரை தேன்களை சேகரித்து வருகிறார். இன்று அவருடைய விபிஸ் இயற்கை தேனீ பண்ணையில் 50 பேர் பணிபுரிகின்றனர்.

ஆனால், தேன் உற்பத்தியில் சிறந்து விளங்கினாலும், அவற்றை சந்தைப்படுத்துதலில் சவால்களை சந்தித்துள்ளார் அவர். கடைகளில் பல பிராண்ட் தேன்களை சுட்டிக்காட்டி, விபிஸ் தேனை நிராகரித்துள்ளனர். அதற்காகவே, துளசித்தேன், பூண்டுத்தேன், மாம்பழம் தேன், நெல்லிக்கனி தேன், அத்திப்பழ தேன், பலாப்பழத்தேன் என மதிப்புக்கூட்டிய 25 வகையான தேன்களாவும் மாற்றத் தொடங்கி விற்பனையை அதிகரித்துள்ளார். தேன் மட்டுமின்றி, தேனீக்கள் பூக்களில் இருந்து சேகரித்து கால்களில் ஏந்திவரும் மகரந்தத்தை பிரித்தெடுத்து, விற்பனை செய்கிறார். ராணித் தேனீயின் உணவுக்காக வேலைக்காரத் தேனீக்கள் உற்பத்தி செய்யும் ராயல் ஜெல்லை சேகரித்து 10கிராம் 1000 ரூபாய்க்கு விற்பனை செய்கிறார். ஒரு கிலோ ராயல் ஜெல்லின் விலை ஒரு லட்ச ரூபாயாம். தவிர, தேன் மெழுகு ஒரு கிலோ 200 ரூபாய்க்கு விற்கிறார். விற்பனை ஒரு புறம் இருக்க, அழிந்து வரும் தேனீக்களை காக்க, "வீட்டுக்கொரு தேனீ பெட்டி, வீட்டுக்கு ஆயுள் கெட்டி" என்ற கோஷத்தை முன்னுறுத்தி 'பழுப்பு புரட்சி'யை செய்து வருகிறார் ஜோஸ்பின். தேனீ வளர்ப்பு குறித்து இரு புத்தகங்களும் வெளியிட்டிருக்கிறார். மூன்றாவது புத்தகம் விரைவில் வெளிவரவிருக்கிறது.

மலருக்கும் மலருக்கும் மணமுடிக்கும் வேலையைத் தான் தேனீக்கள் செய்கின்றன. தேனீக்கள் மூலம் நடக்கும் அயல்மகரந்தச் சேர்க்கையினால், விளைச்சல் அதிகரிக்கும். எங்க வீட்டில் தேனீ பெட்டி இருப்பதால், அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள முருங்கை மரம், எலுமிச்சை மரங்களில் காய்கள் அதிகம் கிடைக்கிறது. விவசாயிகளும் இதை உணர்ந்து தேனீ பெட்டிகளை வாங்கிச் செல்கின்றனர்.

தேனீக்கள் பூக்களில் இருந்து மட்டுமில்லை, கனிகளிலிருந்தும் தேன் எடுக்கும். அயல்நாடுகளில் ஆப்பிள் தேன், ஆரஞ்சு தேன் என பழத்தேன்கள் விற்பனை செய்கின்றனர். வீட்டு பயன்பாட்டுக்காக சப்போட்டா, வாழைப்பழத்தேன்களை தயாரித்துக் கொள்கிறேன். பழத்தோட்டங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் தேனீ பெட்டி வைத்து பயன் பெற்றுவருகின்றனர். இவர் 8000 தேனீ வளர்ப்பாளர்களை உருவாக்கியுள்ளார்.


அவரது வீட்டிலே மாதத்தின் இரண்டாவது மற்றும் நான்காவது சனிக்கிழமைகளில் இலவசப் பயிற்சியும் வழங்குகிறார். தேனீ வளர்க்க விரும்புபவர்களுக்கு, ஸ்டாண்டு, தேன் எடுக்கும் மெஷின், பெட்டி, பிரேம் என எல்லா உபகரணங்களையும் தயாரித்து விற்பனை செய்கிறார். தேனீ வளர்ப்பில் ஜோஸ்பினின் பங்களிப்பை பாராட்டி, இதுவரை 6 தேசிய விருதுகளும், 36 மாநில விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. 'இந்திய அளவில் சிறந்த பெண் தேனீ வளர்ப்பாளர்' என்று விருதும் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளார்.

ஜோஸ்பினுக்கு ஆனந்தம் எல்லாம் விலை மதிப்பானது என்ற முத்திரையில் உள்ள தேன், 5 ரூபாய், 10ரூபாய்க்கும் அனைத்து மக்களுக்கும் கிடைக்கும் வகையில் சந்தைப்படுத்தவேண்டும் என்பதே. அதற்கான சிறு பங்காய், மிஷினரி மூலம் தேன் எடுக்கும் சாதனங்களை பொருத்திய கம்பெனியை 2கோடி ரூபாய் செலவில் கட்டமைத்துக் கொண்டிருக்கிறார்.

– M. **தரணி**

## இது தானே நீ விரும்பியது!

ஊஹானில் பிறந்தாய்
உறவாடி நுழைந்தாய்
உறக்கம் கலைத்தாய்
உயிரை உருவுகிறாய்
விழித்தெழுந்து முழிக்கிறோம்
விடை தெரியாமல்
நீயோ உல்லாசமாய் உலகெங்கும் உலா வருகிறாய்
ஒரே மூச்சில் உலகையே புரட்டி விட்டாய்
முகமூடி மனிதர்கள்
வெறிச்சோடிய சாலைகள்
காலியாய் கடைகள்
அடைபட்டு கிடக்கும் அலுவலகங்கள்
சிறுவர்களின் சிரிப்பில்லா பூங்காக்கள்
நிரம்பி வழியும் விமான நிலையங்கள்
சரிந்த பங்குச் சந்தைகள்
சல்லியாய்ப் போன மில்லியனர்கள்
உறைந்து போன வல்லரசுகள்
கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய்
விஸ்வரூபம் எடுக்கின்றாய்
நீ யார்? எதற்காக வந்தாய்?
மசூதிகளில் தொழுகை இல்லை
தேவாலயங்களில் பிரார்த்தனை இல்லை
கோவில்களில் கூட்டம் இல்லை
கேளிக்கை கொண்டாட்டங்கள் இல்லை



மதங்களும் கொள்கைகளும் எங்களைப் பிரிக்க
ஆணவத்தில் மதியிழந்து ஒருவரையொருவர் அழித்தோம்
வெட்டிப் பேச்சும் வீண் சண்டையுமாய்
விரயமாய்ப் போனதுவாழ்க்கை
மூச்சை முடக்கினாய் ஆணவம் அடக்கினாய்
மூச்சு இருந்தால் தானே பேச்சு?
எந்த மூச்சில் நீ எம்முள் நுழைவாயோ என்ற அச்சத்தில்
தாழிட்ட இல்லங்களில் இறைவனை இறைஞ்சுகிறோம்
நீ சென்று விடு, எங்களை விட்டு விடு
காடுகளை அழித்தோம்
தீயாய்ப் பரவி துவம்சம் செயதாய்
மண் வளங்களை சூறையாடினோம்
எரிமலையாய் வெடித்தாய்
நீர்நிலைகளை நாசம் செய்தோம்
சுனாமியாய்ப் பொங்கினாய்
விலங்குகளையாவது விட்டுவைத்தோமா?
வேட்டையாடி தின்று குவித்தோம்
அவற்றின் கதறல் கேட்டு ஓடி வந்தாயோ?
இயற்கையின் தூதுவனே! எமக்கு புத்தி புகட்ட!
மடி கணினியும் கை பேசியுமாய்
நிற்க நேரமின்றி நிமிர விருப்பமின்றி
ஓடிய நாங்கள் நிலை குலைந்து நிற்கிறோம்
யோசிக்கிறோம்!
கணக்கும் பிணக்குமாய் பிளவுண்ட குடும்பங்கள்
இன்று இணைந்து நிற்கின்றன
ஒன்றாய்க் கூடி உண்கிறோம்
ஸ்விக்கியில். சாப்பாடு வருவதில்லை
உடற்பயிற்சி செய்கிறோம் உறவாடி மகிழ்கிறோம்
வாய் விட்டு சிரிக்கிறோம்!
ஒவ்வொரு சுவாசத்தையும் நன்றியில் நனைக்கிறோம்
இது தானே நீ விரும்பியது?
இனி நீ மௌனமாய் சென்று விடு.

**கவிஞர் நிவேதிதா**

குணப்படுத்த முடியாத செக்ஸ் வியாதியா? குணப்படுத்த முடியும்

ஆப்பரேஷன் இல்லாமல் அறுவை சிகிச்சையின்றி ஆயுட்கால (100%) உத்திரவாதம்

Cell : 9543096605

# மூலம் -PILES

மலம் கழிக்கும்போது வலி, எரிச்சல், ரத்தம், சதை கட்டி மற்றும் பல

Fees Rs.200/-

விரைவீக்கம், HYDROCELE

பவுத்திரம் FISTULA

20 வருட அனுபவம்

## NAGMATA ✚ CLINIC

97/28, Ponnambalam Salai, K.K. Nagar, Ch-78. (Amman Koil Bus Stop)



## SEX PROBLEM? CONTACT Dr. R. BISWAS

CALL 9841366289

ஆண்குறி சிறியதாக இருப்பது - PENIS SMALL SIZE

ஆண்மை வீரியம் இல்லாமை - IMPOTENCY

விரைவில் விந்து வெளிவருவது - SHORTLY SPERMS COMEOUT

விந்து தண்ணீர் போல வருவது - SPERMS WATER TYPE

தூக்கத்தில் விந்து வெளிவருவது - SLEEPING TIME SPERM RELEASE

பிறப்புறுப்பில் புண், சீழ், அரிப்பு - V.D., GONORRHOEA, SYPHILIS

சிறுநீர் கழிக்கும்போது வலி, எரிச்சல், சூடு - URINE PROBLEMS

குழந்தை இல்லாம, மலட்டுத்தன்மை - INFERTILITY

ஞாபக சக்தி இல்லாமை - LOSS MEMORY

ஆண் உறுப்பு மூடிய நிலையில் இருப்பது - PHYMOSIS

## நாக்மாதா ✚ கிளினிக்

ப.எ. 97, பு.எ. 28, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், சென்னை78.

கே.கே.நகர் அம்மன் கோயில் பஸ் ஸ்டாப் Cell : 9543096605

நேரம் : காலை 9.00 டு 1.00 மணி வரை மாலை 4.00 டு 8.30 மணி வரை

# உலக பொருளாதாரம் மோசமடையுமா?

ஒருமாதத்திற்கு முன்புவரை கொரோனா வைரஸ் சீனாவின் உள்ளூர் பிரச்சினை மட்டுமே என்றும், அதனால் உலகின் பிறநாடுகளுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை என்றும் கருதப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அதற்கு எந்தவொரு பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்க தேவையில்லை என உலகநாடுகள் அலட்சியம்காட்டின. ஆனால், இன்று நிலைமை தலைகீழாய் மாறி, கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பொருளாதார ரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

2008ன் பொருளாதார நெருக்கடி ஏற்படுத்திய பாதிப்பையே ஏராளமான நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் நாடுகள் இன்னமும் சரிசெய்ய முடியாமல் தவிக்கின்றன. ஏற்கனவே, சரிவை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த உலகப் பொருளாதாரத்தை மேலும் தள்ளி விழுத்தி உள்ளது கொரானவைரஸ். பயணத்தடை, விளையாட்டு நிகழ்வுகள் ரத்து, வெகுஜன கூட்டங்களுக்குத் தடை, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் ரத்து, பங்குச்சந்தை வீழ்ச்சி, வெறிச்சோடிய வணிகவளாகங்கள், விமான நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூடல் என தொடர்பாதிப்புகளால் Covid-19 உலகப் பொருளாதாரத்தில் தன்கைவரிசையைக் காட்டியிருக்கிறது.

**உலக முதலாளித்துவ நெருக்கடி:** ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலேயே சீனப் பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையும் பாதிப்புக்குள்ளாகியது. 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சில்லறை விற்பனை (Retail Sales) 2020 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 20.5% சரிந்துள்ளது. தொழில்துறை உற்பத்தி 13.5% குறைந்துள்ளது. நிலையான சொத்து முதலீடு கிட்டத்தட்ட 25% குறைந்துள்ளது.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நிலைமை இதைவிட வேகமாக மோசமடைந்து வருகிறது. இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளில் 7 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் உலக பங்குச்சந்தைகளில் இருந்து காணாமல் போனது. ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் 0% வளர்ச்சியுடன் இருந்த அமெரிக்காவின் பொருளாதாரம், இப்போது ஏப்ரல் மற்றும் ஜூன் மாதங்களுக்கு இடையில் மேலும் 5% சுருங்கிவிடும் என்று முதலீட்டு வங்கி கருதுகிறது. ஆண்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி வெறும் 0.4% தான் இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. “2008 ஆம் ஆண்டின் நிதி நெருக்கடியின்போது ஏற்பட்ட சரிவுக்கு இணையாக, இரண்டாவது காலாண்டில் அமெரிக்க பொருளாதாரம் 8% சுருங்கிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்,” என்று ஐ.என்.ஜி பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.




மூலதன பொருளாதாரத்தில் (Capital Economics) பிரிட்டனின் தலைமை பொருளாதார நிபுணராக கருதப்படும் பால்டேல்ஸ், இரண்டாவது காலாண்டில் பிரிட்டனில் உற்பத்தி 2.5% குறைந்துவிடும் என்று மதிப்பிட்டுள்ளார். அதேநேரத்தில் இதில் 5% வீழ்ச்சி சாத்தியம் என்றும் கூறுகிறார். முதலாளித்துவ நிபுணர்கள் வீழ்ச்சியை குறைத்து மதிப்பிடுவது உண்டு. தற்போது அவர்களே மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சியின் சாத்தியத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

Supply மற்றும் Demand என பொருளாதாரத்தின் இருபக்கங்களையும் Covid-19 பாதிக்கிறது என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளதால் பொருட்கள் மற்றும் சேவைகளின் Supply பலவீனமடைகிறது. ஏற்கனவே தாம் உற்பத்தி செய்வதை நுகர்வோர் வாங்க முடியாத நெருக்கடி இருந்ததை அறிவோம்.

இதற்கு முன்எப்போதும் இல்லாத ரீதியில் உலகளாவிய கடன் அதிகரித்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால், உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு $86,000 கடன் இருப்பதற்குச் சமம். 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி நிறுவனங்களைத் தவிர்த்து, மற்ற துறை நிறுவனங்களில் நிலுவையில் உள்ள மொத்தக் கடன் உலகளவில் 13.5 டிரில்லியன் டாலராக உயர்ந்துள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும். மொத்த உலக கடன் 240 ரில்லியன்களைத் தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறது.

**சுருங்கும் உலகமயமாக்கல்:** போர்களைப் போன்ற சில மோசமான நெருக்கடிகள் வரலாற்றை வேகமாக முன்னோக்கி நகர்த்தக் கூடியவை. ஒரு குறிப்பிட்ட நாட்டில் பொதுவாக அரை நூற்றாண்டில் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் அல்லது



பாதிப்புகள், போர் போன்ற நெருக்கடிகளால் ஓரிரு ஆண்டுகளிலே நடைபெறும். இதற்கு ஒரு முக்கியமான எடுத்துக்காட்டு கொரோனா வைரஸ். இந்தத் தொற்று நோய் ஈரான், ஈராக், ரஷ்யா, நைஜீரியா மற்றும் வெனிசுலா போன்ற நாடுகளின் புவிசார் அரசியலில் மிகமோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. உதாரணத்திற்கு, இந்நாடுகளின் பிரதான வருவாய் எண்ணெய் மற்றும் எரிவாயுதான். ஆனால், கொரோனா வைரஸ் பாதிப்பினால் இவற்றின் விலைகள் வரலாறு காணாத அளவில் வீழ்ச்சியடைந்துள்ளன.

ஹைட்ரோ கார்பன்களுக்கான நுகர்வோர் சந்தை பலவீனமடைந்துவரும் சூழலில், விலைகளை உறுதிப்படுத்த ரஷ்யாவும் சவுதி அரேபியாவும் முயற்சிகள் எடுத்தன. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மற்றும் சவுதி இளவரசர் முகமது பின்சல்மான் ஆகியோரிடையே நடந்த பேச்சுவார்த்தை தோல்வி இன்னும் பலமாதங்கள் நீடிக்கப்போகும் விலையுத்தத்திற்கு வழிவகுத்துள்ளன. உள்நாட்டுப் பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள்பற்றிய இவர்கள் இருவரின் தவறான கணக்கீடுகள், எதிர்பார்த்ததைவிடவும் மோசமான சிக்கல்களை உருவாக்கக்கூடும்.

முன்னணி ஹைட்ரோ கார்பன் உற்பத்தியாளரான ஈரான், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளிலிருந்து தப்பியிருந்தாலும், இப்போது கடுமையான நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ளது. மேலும், ஈராக் மற்றும் வெனிசுலா நாடுகளில் எண்ணெய் விலை குறைந்ததில் இருந்து பெரும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளன.

அல்ஜீரியா, அதன் வருவாய்க்கும் வாழ்வாதாரத்திற்கும் ஹைட்ரோ கார்பன்களை நம்பியுள்ளது. இந்நாட்டின் ஆட்சியாளர்களுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் இடையே இதுகுறித்து நிலவிய மாற்றுக் கருத்துகளால் பதட்டமான சூழல் நிலவி வந்த நிலையில், கொரோனா வைரஸ் நோயால் மக்கள் பெருவாரியாகத் தெருக்களில் இறங்கிப் போராட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால், அதேநேரம், ஒடுக்கப்பட்ட மக்களின் கோபம் கொரோனாவுக்குப் பின்னர் அது ஏற்படுத்தியுள்ள பொருளாதாரச் சிக்கல்களுடன் சேர்ந்து பெரும் அளவில் வெடிக்கக்கூடிய வாய்ப்புகளும் உண்டு.

தொற்றுநோய்க்கும் எண்ணெய் விலைகளின் வீழ்ச்சிக்கும் உள்ள தொடர்பு உலகமயமாக்களை மோசமான சரிவிற்கு எடுத்துச்சென்றுள்ளதை நாம் கவனிக்கவேண்டும். இதுமட்டுமல்லாமல், கொரோனா வைரஸ் ஒரு மாபெரும் அதிகாரச் சண்டையையும் ஊக்குவித்துள்ளது. சீனா மற்றும் அமெரிக்கா தேசியவாதிகள் ஏற்கனவே பல்வேறு தருணங்களில் ஒருவர்மேல் உள்ள வெறுப்பை வைரஸின் பேரால் காட்டத் துவங்கியுள்ளனர். யு.எஸ்-சீனா இடையேயான போட்டி யு.எஸ்-சோவியத் இடையே நிலவிய போட்டியைவிட குறைவான ஆபத்தானதுதான் என்று பல ஆண்டுகளாக நம்பப்பட்டது.

உலகெங்கிலும் நாடுகளில் தங்களின் 5 ஜி நெட்வொர்க்கை விற்பனை செய்வதில் போட்டி தீவிரமடைவதால், இருநாடுகளுக்கிடையேயான உறவு மோசமடையும். குறிப்பாக சீனாவின் தாக்கம் யூரேசியா முழுவதும் பரவி வருகிறது.


உலக மயமாக்கள் விஷயத்தில் அமெரிக்கா-சீனா இடையே பெரும் உரசல் ஏற்படும். வெறும் கொரோனாவால் மட்டும் இல்லாமல், காலநிலை தொடர்பான பேரழிவுகள், Cyber attacks என இப்பெரிய சக்திகளின் அடிதடிகள் தொடரும் வாய்ப்பே உள்ளது.

மேலும் Covid-19 தடுப்பூசிக்கான பிரத்யேக உரிமைகளுக்காக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கணிசமான தொகையை ஒருநிறுவனத்திற்கு வழங்க தயாராக இருந்ததை ஒரு ஜெர்மன் செய்தித்தாள் வெளியிட்டுள்ளது. ஆயினும்கூட ஐரோப்பிய அதிகாரம் இதனால் ஆத்திரமடைந்ததைத் தொடர்ந்து, சில நாட்களில் ஐரோப்பிய ஒன்றியம் 90 மில்லியன் டாலர்களை அந்நிறுவனத்தில் முதலீடு செய்யப்போவதாக அறிவித்தது. இதையெல்லாம் பார்க்கும்போது கொரோனவை கட்டுப்படுத்தும் மருந்துக்கான உரிமைகளைப் பெறவும் - ஏனைய வளங்களுக்கும் பணக்கார நாடுகள் தங்களுக்குள் விலங்குகளைப்போல சண்டையிடப் போகின்றன என்றே தோன்றுகிறது. கொரோனாவுக்கு பின்னான உலகத்தில் அமெரிக்கா மற்றும் சீனா, அட்லாண்டிக் கூட்டணி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் பல பிளவுகள் ஏற்படக்கூடும்.

இறுதியில் பொருளாதார தாக்கம் எதுவாக இருந்தாலும், அதை நாம் ஒட்டுமொத்தமாக Covid-19 நோயின் மேல் போட்டுவிட முடியாது. ஏனெனில் உலகப் பொருளாதாரம் ஏற்கனவே மிகவும் பாதிப்படைந்திருந்த நிலையில், கொரோனா என்பது மூழ்கிக்கொண்டு இருந்த படகில் போடப்பட்ட மற்றுமொரு பெரிய ஓட்டை மட்டுமே. முதலாளித்துவ பொருளாதார எல்லைகளை இன்று நன்றாக நாம் பார்க்க கூடியதாக இருக்கிறது. இதன் அறிதலில் இருந்து நாம் திட்ட மிட்ட பொருளாதார நடவடிக்கை நோக்கி நகர முன்வர வேண்டும்.

**- வீர ஆறுமுகம்**

# சமஸ்கிருதம் இந்தியை வீழ்த்தி தமிழ் முதலிடம்



விக்கிமீடியா அறக்கட்டளையும், கூகுள் நிறுவனமும் இணைந்து நடத்திய இந்திய மொழிகளுக்கிடையிலான கட்டுரைகள் எழுதும் போட்டியில் தமிழ் மொழி முதல் இடத்தை பெற்றுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வந்த வேங்கைத் திட்டம் 2.0 என்றழைக்கப்படும் இந்த போட்டியில் தமிழ், இந்தி, பஞ்சாபி, மராத்தி, உருது உள்ளிட்ட பல்வேறு மொழிகளுக்கிடையே கடும் போட்டி நிலவி வந்தது. இந்நிலையில், போட்டிக்கான காலகட்டத்தில் அதிகபட்ச கட்டுரைகள் மட்டுமின்றி, பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ் மொழி முதலிடத்தை பெற்றுள்ளது. இரண்டாவது முறையாக நடத்தப்பட்டுள்ள இந்த போட்டியின் முக்கியத்துவம் என்ன? இது மொழிகளின் வளர்ச்சிக்கு எந்த வகையில் உதவும்? இந்த போட்டியில் தமிழ்மொழி முதலிடம் பெறுவதற்கு வித்திட்டவர்கள் யார், யார்? என்று இந்த கட்டுரை அலசுகிறது.

**எதற்காக இந்த போட்டி?:** நீங்கள் கூகுள் உள்ளிட்ட எந்த தேடுபொறியில் எந்தவொரு விடயத்தை தேடினாலும் பெரும்பாலான சமயங்களில் முதல் முடிவாக விக்கிப்பீடியாவே காட்டப்படும். கட்டற்ற கலைக்களஞ்சியமாக விளங்கும் விக்கிப்பீடியாவில் உலகின் பெரும்பாலான மொழிகளில் எண்ணற்ற தலைப்புகளில் கட்டுரைகள் காணக்கிடைக்கின்றன. துறைசார் வல்லுநர்கள் முதல் பொது மக்கள் வரை யார் வேண்டுமானாலும் விக்கிப்பீடியாவில் புதிய தலைப்பில் கட்டுரை படைக்கலாம் அல்லது ஏற்கனவே உள்ள கட்டுரைகளில் மேலதிக தகவல்களை சேர்க்கலாம். அவை தக்க வழிமுறைகளுக்கு பின்னர் பதிப்பிக்கப்படும்.

இந்நிலையில், தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விக்கிமீடியா - கூகுள் இணைந்து நடத்தும் இந்த போட்டியின் முக்கிய நோக்கமே, குறிப்பிட்ட காலகட்டத்தில் இணையத்தில் தமிழ் மொழியில் அதிகளவில் உள்ளடக்கங்களை உருவாக்குவதே என்று கூறுகிறார் வேங்கைத் திட்டம் 2.0 குழுவின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரும், மென்பொறியாளருமான நீச்சல்காரன் என்று அறியப்படும் இராஜாராமன் "தமிழில் வேங்கைத் திட்டம் 2.0 என்றும் ஆங்கிலத்தில் டைகர் என்றும் பெயரிடப்பட்டுள்ள இந்த போட்டியானது கடந்த அக்டோபர் 10ஆம் தேதி முதல் ஜனவரி 10ஆம் தேதி வரை மூன்று மாதங்களுக்கு தொடர்ச்சியாக நடத்தப்பட்டது. ஒருபுறம், விக்கிப்பீடியாவில் எழுவது குறித்து சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்ட நிலையில், மற்றொரு புறம் எழுத ஆர்வம் இருந்தும் அதற்கு வசதியில்லாத சுமார் 50 பேர் விண்ணப்பத்தின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு மடிக்கணினி மற்றும் இணைய வசதி ஆகியவை இந்த திட்டத்தின் வாயிலாக ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது."

**வெற்றி சாத்தியமானது எப்படி?:** 2018-2019இல் நடைபெற்ற முதலாமாண்டு போட்டியில், தொடக்கம் முதலே அதிக கட்டுரைகள் எழுதுவதில் இந்திய மொழிகளுக்கிடையே முன்னிலையில் இருந்து வந்த தமிழ் மொழியை, கடைசி கட்டத்தில் பஞ்சாபி மொழி பின்னுக்குத்தள்ளி முதலிடத்தை பெற்றது. அதே போன்று, இந்த ஆண்டும் தமிழ் - பஞ்சாபி ஆகிய மொழிகளுக்கிடையே பலத்த போட்டி நிலவி வந்த சூழ்நிலையில் இந்த வெற்றி எப்படி சாத்தியமானது என்று நீச்சல்காரனிடம் கேட்டோம்.

"முதலாம் ஆண்டில் கடைசி நேரத்தில் வெற்றியை இழந்தது தமிழ் விக்கிப்பீடியா ஆர்வலர்களுக்கிடையே மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியது. எனவே, முதலாம் ஆண்டை போலல்லாமல் இந்த ஆண்டு போட்டியில் திட்டமிட்டு செயல்பட முற்பட்டோம். அந்த வகையில் பயிற்சி வகுப்புகளை நடத்துவது, எழுவதற்கான வசதிகளை ஏற்படுத்தி தருவது, ஊக்கமளிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். அதுமட்டுமின்றி, எதிர்பாராத வகையில், சில

| Languages | Articles ▾ | Participants |
|---|---|---|
| Tamil | 2959 | 62 |
| Punjabi(Gurmukhi) | 1768 | 34 |
| Bengali | 1460 | 49 |
| Urdu | 1377 | 25 |
| Santali | 566 | 18 |
| Hindi | 417 | 26 |
| Telugu | 416 | 42 |
| Kannada | 249 | 17 |
| Malayalam | 229 | 8 |
| Marathi | 220 | 18 |
| Assamese | 205 | 18 |
| Gujarati | 202 | 7 |
| Odia | 155 | 5 |
| Tulu | 32 | 5 |
| Sanskrit | 19 | 4 |

தனிப்பட்ட நபர்கள் வியப்பளிக்கும் வகையிலான பங்களிப்பை அளித்ததே இந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணம்," என்று அவர் கூறுகிறார்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வந்த இந்த போட்டியின் இறுதி முடிவுக்கு சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டன. அதன்படி, 2,959 கட்டுரைகளுடன் தமிழ் மொழி முதலிடமும், 1768 கட்டுரைகளுடன் பஞ்சாபி (குர்முகி எழுத்து வடிவம்) இரண்டாமிடமும், அடுத்தடுத்த இடங்களை பெங்காலி, உருது, சந்தாளி, இந்தி உள்ளிட்ட மொழிகளும் பெற்றன. இந்தியாவை பொறுத்தவரை இணையத்தில் அதிக உள்ளடக்கங்களை கொண்ட மொழியாக விளங்கும் இந்தியில் 417 கட்டுரைகளை 26 பேர் படைத்திருந்த நிலையில், தமிழ் மொழியில் அதைவிட 2,542 அதிக கட்டுரைகளை 62 பேர் படைத்தனர்.

முதலிடம் என்ற ஒற்றை நோக்கத்திற்காக எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு செயல்பட்டதால் இந்த போட்டிக்காக படைக்கப்பட்ட உள்ளடக்கங்களின் தரம் பாதிக்கப்பட்டதா என்று அவரிடம் கேட்டபோது, "இந்த போட்டியின் நோக்கமே காலத்திற்கும் இணையத்தில் நிலைத்து நிற்கும் நம்பத்தகுந்த உள்ளடக்கங்களை படைப்பதுதான். எனவே, இதை உறுதிசெய்யும் வகையில் போட்டி விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தன. அதாவது, இந்த போட்டியில் பங்குபெறுபவர்கள் எந்தெந்த தலைப்புகளின் கீழ் கட்டுரைகளை படைக்கலாம் என்ற பரிந்துரையை கூகுள் நிறுவனம் மட்டுமின்றி பல்வேறு தரப்பினரும் கலந்துரையாடி முடிவு செய்தோம்" என்று அவர் கூறுகிறார்.

"ஒரு கட்டுரை குறைந்தபட்சம் 300 சொற்களை கொண்டதாக இருக்க வேண்டும் என்பது அடிப்படை விதி. மேலும், கட்டுரையில் போதிய அளவு தக்க சான்றுகள் இடம் பெற வேண்டும். எந்திர மொழி பெயர்ப்புகள் ஏற்கப்பட மாட்டாது; பதிப்புரிமை சிக்கல்கள் இருக்கக் கூடாது. ஒரு ஒருங்கிணைப்பாளர் எழுதியதை மற்றொருவர் சரிபார்க்க வேண்டும் உள்ளிட்ட விதிமுறைகள் கவனமாக பின்பற்றப் பட்டன."இந்த கட்டுரையை படித்து கொண்டிருக்கும் பலருக்கும் ஏன் விக்கிப்பீடியா எனும் பன்னாட்டு இணையதளத்தில் தமிழை வளர்த்தெடுக்க வேண்டும்? தமிழுக்கென தனியே இணைய தளத்தை உருவாக்க முடியாதா? போன்ற கேள்விகள் எழக் கூடும். இதுகுறித்து நீச்சல்காரனிடம் கேட்ட போது, "கணித்தமிழை வளர்த்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பலருக்கும் அடிக்கடி எழும் கேள்வி இதுதான். இதை செயற்படுத்துவதற்காக இதுவரை இரண்டு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு அவை பலனளிக்காமல் முடிவுற்றன. இதுபோன்ற மிகப் பெரிய முன்னெடுப்புகளுக்கு பங்களிக்க திரளான தன்னார்வலர்கள் தயாராக இருந்தாலும் கூட, அரசின் ஆதரவு இன்றிமையாதது. ஒரு முயற்சியின் தொடக்கத்தில் கிடைக்கும் அரசின் ஆதரவு நிலைத்து நிற்பதில்லை. எனவே, இதுபோன்ற சமயத்தில் ஏற்கனவே பல்வேறு உலக மொழி களில் சிறந்து விளங்கும் விக்கிப்பீடியாவை தமிழ் மொழியில் வளர்த்தெடுப்பதற்கு கூகுள் போன்ற நிறுவனங்களும் உதவி செய்வதை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று அவர் கூறுகிறார்.

எதிர்காலத்தில் விக்கிப்பீடியாவை போன்று தமிழ் மொழிக்கென தனிப்பட்ட இணையதளத்தை உருவாக்கும்போது ஏற்கனவே படைக்கப்பட்டுள்ள உள்ளடகங்களையும் பயன்படுத்த முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவிக்கிறார். "விக்கிப்பீடியாவில் இருக்கும் கட்டுரைகளை யார் வேண்டுமானாலும் எவ்வித கட்டுப்பாடுமின்றி எடுத்து பயன்படுத்திக் கொள்ள முடியும். இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் பலரும் விக்கிப்பீடியாவில் தமிழ் மொழியின் உள்ளடக்கத்தை கூட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒருவேளை, விக்கிப்பீடியா போன்று தமிழ் மொழிக்கென தனி இணையதளம் ஒன்று எதிர்காலத்தில் உருவாக்கப்படும் பட்சத்தில், அதில் விக்கிப்பீடியாவில் இருக்கும் அனைத்து உள்ளடக்கங்களையும் எவ்வித சிக்கலுமின்றி பயன்படுத்திக் கொள்ள முடியும்" என்று நீச்சல்காரன் உறுதியளிக்கிறார்.

விக்கிப்பீடியா நடத்திய இந்த போட்டியில் தமிழ் மொழியின் வெற்றியை உறுதிசெய்ததில் சேலத்தை சேர்ந்த பாலசுப்ரமணியன் - வசந்த லட்சுமி தம்பதியினர் மிகப் பெரிய பங்களிப்பு செய்துள்ளனர். அதாவது, இந்த போட்டிக்காக தமிழ் மொழியில் மொத்தம் எழுதப்பட்டுள்ள 2959 கட்டுரைகளில் பாலசுப்ரமணியன் 629 கட்டுரைகளையும், அவரது மனைவி வசந்த லட்சுமி 270 கட்டுரைகள் என இந்த தம்பதியினர் மட்டும் 899 கட்டுரைகளை படைத்துள்ளனர்.

**- S. செந்தில்குமார்**

# எடப்பாடி பழனிசாமிக்கு
# பிரதமர் மோடி பாராட்டு



கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்காக எடப்பாடி பழனிசாமிக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையில் தமிழக அரசு தீவிரம் காட்டி உள்ளது. இதையொட்டி முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அனைத்து துறை அதிகாரிகளையும் அழைத்து ஆலோசனை நடத்தி தகுந்த உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். அமைச்சர் விஜயபாஸ்கர் தினமும் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார். பல்வேறு விழிப்புணர்வு பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தமிழக அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். இதற்காக பிரதமர் மோடி இன்று காலையில் முதல்- அமைச்சர் எடப்பாடி பழனிசாமியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க தமிழக அரசு எடுத்து வரும் அனைத்து முன்எச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தனது பாராட்டுக்களை தெரிவித்தார். பிற மாநிலங்களை காட்டிலும் தமிழகத்தில் சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக பாராட்டுகிறேன். அவ்வப்போது நீங்கள் எடுத்து வரும் நடவடிக்கைகள், ஆலோசனைகள் மக்களுக்கு உடனுக்குடன் சென்றடைவது பாராட்டுக்குரியது. இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

அதற்கு முதல்-அமைச்சர் எடப்பாடி பழனிசாமி நன்றி தெரிவித்ததோடு, தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொடர்பாக மேற்கொண்டு வரும் முன்எச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். பிரதமர் அறிவித்த 9 அம்சங்களும், தமிழ்நாடு முழுவதும் நாளை கடைபிடிக்கப்படும் என்றும் தெரிவித்தார். தமிழகத்துக்கு ரூ.9,000 கோடி நிதி வழங்க வேண்டும் என, பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் பழனிசாமி இன்று (மார்ச் 28) பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில், "கரோனா வைரஸைக் கட்டுப்படுத்த தமிழக அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கரோனா தாக்கம் அதிகமுள்ள நாடுகளில் இருந்து வந்தவர்களுக்கு சோதனைகள், தனிமைப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளும்

அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டுபிடித்தலும் சமூக பரவலைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகை செய்யப்பட்டுள்ளது. பிரதம மந்திரி கரிப் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் பல்வேறு நிவாரண உதவிகளை அறிவித்ததற்கு உங்களுக்கு நன்றி. இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்த பணப்புழக்கம் மற்றும் வட்டி வீதக் குறைப்பு நடவடிக்கைகள் பொருளாதாரத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

ஊரடங்கை கண்டிப்பாக நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு, ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் நலனை உறுதி செய்வது மாநில அரசுகளின் கடமை. தமிழகம் உட்பட பல மாநில அரசுகள் பிரதான் மந்திரி கரிப் கல்யாண் யோஜனா தொகுப்பின் மூலம் நிவாரண உதவிகளை அறிவித்துள்ளன. வரும் நாட்களில் இன்னும் நிவாரண நடவடிக்கைகள் தேவைப்படும். சுகாதார உள்கட்டமைப்பு மற்றும் மருத்துவப் பொருட்களின் தேவையை உறுதி செய்ய செலவுகள் அதிகரிக்கும். அதுமட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சியைச் சீராக்குவதற்கும், பல்வேறு துறைகள் அவற்றின் வளர்ச்சிப் பாதையில் திரும்புவதற்கும், நுகர்வு மற்றும் முதலீட்டுத் தேவையைத் தூண்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அனைத்து அரசாங்கங்களும் வரி மற்றும் வருவாயில் கணிசமான குறைப்புகளை சந்திக்க நேரிடும். மேலும், சிறிது காலத்திற்கு வருவாய் திரட்டலை அதிகரிக்க முடியாது. இருப்பினும், செலவு தேவைகள் மற்றும் பொறுப்புகள் காத்திருக்காது. 2020 மார்ச் 25 தேதியிட்ட எனது கடிதத்தில் நான் உங்களிடம் குறிப்பாகக் கோரியது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீத நிதி பற்றாக்குறை வரம்புகள் 2019-20 மற்றும் 2020-21 ஆகிய நிதியாண்டுகளுக்கு தளர்த்தப்படலாம். 2019-20 நிதியாண்டில் அனுமதிக்கப்பட்ட அளவை விட 33 சதவிகிதம் கூடுதல் கடன் வாங்குவது 2020-21 வரை அனுமதிக்கப்படலாம் என்பதை வலியுறுத்தினேன். இது கூடுதல் செலவுத் தேவைகளை பூர்த்தி செய்ய மாநிலங்களுக்கு உதவும்.

இது உடனடியாக மாநிலங்களுக்கு செலவினங்களை ஈடுகட்ட உதவும் என்றாலும், மாநிலங்கள் இயற்கையாகவே எவ்வளவு கடன் வாங்கலாம் என்பதில் ஒரு வரம்பைக்கொண்டுள்ளன. மேலும் அவை அதிகமாக கடன் வாங்கினால் திருப்பிச் செலுத்தும் கடமைகளால் முடங்கிவிடும். ஆனால்,



நுகர்வு மற்றும் முதலீட்டைத் தூண்டுவதன் மூலம் பொருளாதாரத்தை புதுப்பிப்பதற்கான பொறுப்பு இந்த நேரத்தில் அரசாங்கங்கள் மீது விழுகிறது. இந்திய பொது நிதி அமைப்பின் கீழ், இந்திய அரசால் மட்டுமே, இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் வாங்க முடியும். ஊரடங்கால் பொருளாதார தாக்கம் மிகவும் கடுமையானதாகவும், முன்னெப்போதும் இல்லாத வகையிலும் இருக்கும். இத்தகைய கடினமான காலங்கள் பொருளாதாரம் புத்துயிர் பெறுவதற்கும் மீண்டும் ஊக்கமளிப்பதற்கும் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கிறது. எனவே, இந்திய அரசு, மாநில அரசுகள் கூடுதல் கடன் வாங்குவதற்கு அனுமதிப்பதோடு, மொத்த தொகையை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரோனா வைரஸ் மற்றும் அதன் பின்விளைவுகளை எதிர்த்துப் போராட மாநில அரசுகளுக்கு சிறப்பு மானியமாக ரூ.1 லட்சம் கோடி வழங்க வேண்டும். இது மத்திய பட்ஜெட்டில் திட்டமிடப்பட்டுள்ள மாநிலங்களுக்கான பிற நிதி பரிமாற்றங்களுடன் கூடுதலாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவின் விகிதத்தில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த நிதியை விநியோகிக்க முடியும். ஏனெனில், இந்த மானியத்தின் செலவினம் பொருளாதாரத்தை முதன்மையாகக் கொண்டு அதன் மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும். இந்த சிறப்பு விநியோகத்தின் கீழ் தமிழகத்திற்கு ரூ.9,000 கோடி மானியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் கடினமான மற்றும் சவாலான இந்த காலங்களில், தேசத்தின் நலனுக்காக தைரியமான, கடினமான மற்றும் வழக்கத்திற்கு மாறான முடிவுகளை எடுப்பதில் இருந்து விலகிச் செல்லாத ஒரு பிரதமராக, இந்த சிறப்புக் கோரிக்கையை நீங்கள் கருத்தில் கொண்டு தேவையான தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்" என முதல்வர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

**- ஆசிரியர்**

# கடவுளுக்கு செய்யும் சேவை

ஒரு பக்க சிறுகதை

ஒரு மன்னர் இருந்தார் , அவருக்கு ஆன்மிகத்துல ரொம்ப ஈடுபாடு அடிக்கடிகோவிலுக்குபோவார். வழக்கம் போல ஒரு நாள் கோவிலுக்கு போனார். கடவுளை வேண்டினார் திரும்பிவரும்பொழுது கோவிலுக்கு வெளியில ஒரு மரத்தடியில ஒரு சந்நியாசி உட்கார்ந்திருக்கார், அவர் கண்ணை, மூடிகிட்டு தியானத்துல இருந்தார். மன்னர் அவர்கிட்ட ஆசீர்வாதம் வாங்கனும்னு, அவர் காலில் விழுந்தார், கண்களைத்திறந்த சன்யாசி ஆசிர்வாதம் பண்ணினார். மன்னர் தன்கிட்டே இருந்த விலை உயர்ந்த சால்வை ஒன்றை சன்னியாசிக்கு போர்த்தினார். விடை பெற்றார்.

மறுநாள் காலைல மன்னர் அரண்மனை மேல் மாடத்துல நின்னுகிட்டு இருந்தார். அப்போ தெருவுல ஒரு பிச்சைக்காரன் போய்கிட்டு இருந்தான், அவனை பார்த்ததும் மன்னருக்கு அதிர்ச்சி. காரணம், நேற்று அந்த சன்யாசி கிட்டே ஒரு விலை உயர்ந்த சால்வையை போத்தினாரே அதே சால்வையை இப்போ அந்த பிச்சைகாரன் போர்த்திகிட்டு போறான். மன்னர் உடனே காவலர்களை கூப்பிட்டு அந்த பிச்சைக்காரனை கூட்டிகிட்டு வர சொன்னார். அவன் வந்தான்.

"உனக்கு எப்படி இந்த போர்வை வந்ததுனு விசாரிச்சார். அவன் "கோவில் வாசலிலே தனக்கு ஒரு சன்யாசி கொடுத்தார்னு விபரம் சொன்னான். உடனே போய் அந்த சன்யாசியை இங்கே கூட்டிகிட்டு வாங்கனு உத்தரவு போட்டார். சன்யாசி வந்து சேர்ந்தார். என்ன நடந்ததுன்னு விசாரித்தார் மன்னர்.

"மன்னா! நீ இந்த போர்வையை எனக்கு போர்த்திட்டு போனதுக்கு அப்புறம் கொஞ்ச நேரத்துல இந்த பிச்சைக்காரன் அந்த பக்கமாக வந்தான். ஒரு கிழிஞ்ச துண்டை கட்டியிருந்தான், உடம்பு குளிராலே நடுங்கிகிட்டு இருந்தது. பார்க்க பரிதாபமா இருந்தது. அதான் உடனே இதை எடுத்து அவனுக்குப் போர்த்தி விட்டேன்" அப்படீன்னார்.

"என்ன இருந்தாலும் இது எனக்கு செய்த அவ மரியாதை. அது மிகவும் விலை உயர்ந்த சால்வை. மன்னர்களுக்கு என்றே விசேசமாக தயாரிக்கப்பட்டது. அதை உங்களுக்கு கொடுத்தேன், அதை போய் நீங்க ஒரு பிச்சைகாரனுக்கு கொடுத்திருக்கீங்க" என்றார்

மன்னருக்கு கோபம் குறையவே இல்லை. சன்யாசி சிரித்தார். மன்னருக்கு கோபம் இன்னும் அதிகமாச்சு, விளைவு அந்த சன்யாசி சிறையில் அடைக்கப்பட்டார். அன்றிரவு மன்னர் தூக்கத்தில் ஒரு கனவு கண்டார். அந்த கனவில், மன்னர் மறுபடியும் அந்த கோவிலுக்கு போகிறார். ஆண்டவன் சந்நிதியில் போய் நிக்கிறார். அங்கே கடவுள் குளிரால் நடுங்கி கொண்டிருக்கிறார்.

மன்னர் " கடவுளே! என்ன ஆச்சு உனக்கு?"

கடவுள் "குளிர் தாங்க முடியலே"

உடனே மன்னர் தன்னிடமிருந்த விலையுர்ந்த சால்வையை எடுத்துக்கொண்டு கடவுளை நெருங்கினார். கடவுள் பயத்தில் கத்தினார்.

"என்ன அது? உன்னுடைய சால்வையா? வேண்டாம் எனக்கு".

மன்னர் "கடவுளே! இதை ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்? நான் என்ன பாவம் செய்தேன்?"

கடவுள் "நேற்று ஒரு சால்வையை எனக்கு கொடுத்தனுப்பினாய்! அதை கொண்டு வந்தவனுக்கு நீ ஒரு பரிசு கொடுத்திருக்கிறாய்! என்ன பரிசு தெரியுமா? சிறை தண்டனை!"

மன்னரை யாரோ தலையில் தட்டுவது போல இருந்தது. திடீர் என்று விழித்து கொண்டார் அவருக்கு எல்லாம் புரிந்தது. ஓடிபோய் அவரே சன்யாசியின் சிறையின் கதவுகளை திறந்து விட்டார். சன்யாசியின் கால்களில் விழுந்தார்.

"சுவாமி நான் அறியாமல் செய்துவிட்டேன், தாங்கள் ஒரு மகான்! என்னை மன்னித்து கொள்ளுங்கள்!" என்றார்

"மன்னா! கஷ்டபடுகிறவர்களுக்கு செய்கிற உதவிதான் கடவுளுக்கு செய்கிற தொண்டு! அதை புரிந்து கொள்" என்று சொல்லிவிட்டு தெருவில் இறங்கி நடக்கலானார்.


இல்லாதவர்களுக்கு செய்யும் உதவி இறைவனுக்கு செய்யும் தொண்டாகக் கருதப்படும்.

**- நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. **Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from No.3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078.
Printed by : S.ALI MOHAMMAD SYEED, at J.M.PROCESS, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: A.MOURIYAN.

national health authority




# BIMAR NAHI RAHA LACHAAR, HO RAHA MUFT UPCHAAR

## World's largest healthcare scheme PM-JAY will make India, 'Ayushman'.

For the first time in the history of India, crores of poor and vulnerable Indians will benefit through the Pradhan Mantri Jan Arogya Yojana, PM-JAY. Now every entitled family will have access to cashless and paperless healthcare coverage for all critical diseases.

- Benefits to over **10 crore** poor and vulnerable families and more than **50 crore** beneficiaries across the country
- Annual healthcare benefits of up to **Rs. 5 Lakh** for every entitled family
- Access to healthcare services in all government and empanelled private hospitals

Toll-Free helpline number
**14555/1800111565**

www.pmjay.gov.in /AyushmanBharatGOI /AyushmanNHA

**MAKKAL VISARANAI**, Tamil Monthly, Posted at EGMORE RMS / 1 (Patrika Channel), **APRIL - 2020**
RNI No.: **TNTAM44870/2012**, Registered No.: **TN/CC(S)DN/461/19-21**, Posted Date of Publication 15th of Every Month




Scan now
to download
the eBook (PDF)

Scan now
to download
the App